ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்று — ஆண்டாள்

தொகுதி ௩௧ | கர ௵ ஐப்பசி ௴ | பகுதி க௰

பிரார்த்தனை

ஸ்ரீராமகிருஷ்ண நாமாமிருதம்

நூற்றெட்டுத் திருநாமம்

(225-ம் பக்கத் தொடர்ச்சி)

54. கரபரிசம் தம்முதுரு காலொளியை நீக்கியதால், தருவிபூதிக் [illegible]யென்றார் சந்திரராம் துணைச் சீடர்.
(கால்–கக்கிய. விபூதிக்கனி-சக்திகட்குச் சுரங்கம்.)

55. வரும் அன்னப் பிராசனத்தில் மதலைக்குக் குதிராமர், தரும் ராம கிருஷ்ணப் பேர் சார்கலிதீர் மந்திரமாம்.
(ராமகிருஷ்ணர் எனும் பெயர் அவரது தந்தையரால் அவ்வமயம் கொடுக்கப்பட்டதன்று, ஆதலின் இது தவறு. அப்பெயர் துறவுநிலையை அளித்த குருவால் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்கின்றனர்—ஆசிரியர், ரா.வி.)

56. பரிசமதால் மோகமழி பான்மையினைக் கண்டறிந்து, பரமஹம்சப் பெயரளித்தார் பசையறுதோத் தாப்புரியார்.

57. சருவதேவ தேவிரூபர் எனயதிகள் சாற்றுவர் அவ், உருவிற்பல கடவுளர்தாம் ஒன்றிமறைந் ததையுணர்ந்து.

58. தரித்திரபஞ்சனர் என்பார் தமது 'வசு மதி' மனையில், தரித்திருக்கும் சயக் கொடியின் தன்மையினால் உபேந்திரரே.
(வசுமதி–உபேந்திரரது மனையின் பெயர். அவர் செல்வத்தாற் பொலிகின்றார்.)

59. நடனஅரங்கத்தில் அவர் நன்காழ்ந்த சமாதிகண்டு, நடநாராயணர் என்னும் நாமமிட்டார் வினோதினியார்.
(வினோதினியார்-ஒரு நடிகையின் பெயர். நட—நடன.)

60. மகத்துவஞ்சேர் நாக் அடிகள் வழங்கினபேர் தீனநாதர்.
(நாக்-துர்க்கா சரணநாகர்.)

61. ஜகத்பந்து மூர்த்தி யென்பார் தகைசான்ற பலராமர்.
(ஜகத்பந்து மூர்த்தி–உலக பந்துவான கிருஷ்ணனின் வடிவம்.)

62. சீரணவும் மனமோஹன் செப்பியபேர் முக்திதாதா.

63. பூரணரிட்டார் பூர்ணப் பிரம்ம நாராயணப் பேர்.

(தொடரும்)

உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்

ஞானத்தின் இயல்பு

(கீதையில் 13-ம் அத்யாயம் 8-ம் சுலோகம் முதல் 12-ம் சுலோகம்வரை ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறியுள்ளதற்கு விரிவுரை.)

ஞானத்தின் இயல்பை நான் உனக்குக் கூறுகின்றேன். ஆன்ம ஞானம் பெறுதற்காக யோகிகள் சுவர்க்க மயக்கங்களையும் (போகங்களையும்) பொருட் படுத்தாமல், பிரம்ம ரந்திரத்தைத் தாண்டுகின்றனர். செழிப்பால் அவர்கள் மயங்கமாட்டார், தவத்தின் கடுமையும் அவர்களைப் பின்வாங்கச் செய்யாது. தவமெனுங் கோட்டையை அவர்கள் தாண்டுகின்றனர். இலக்ஷக் கணக்கான யாகங்களின் புண்ணியத்திற்கும் அப்பாற் செல்கின்றனர். அவர்கள் கருமத்தின் கொடிகளை வேரோடு பிடுங்கி எறிகின்றனர். அவர்களிற் சிலர் பக்திநெறியைச் சார்கின்றனர். சிலர் வெற்றுடலோடு திரிகின்றனர். சிலர் 'நடு மார்க்கத்தைப் பின்பற்றுகின்றனர்'. இந்த ஞானத்தைப் பெறும் நம்பிக்கையால் மகத்தான இருடிகள் ஒரே குறிப்போடு வேதங்களென்னும் மரத்தின் ஒவ்வோர் இலையையும் கொண்டு உயிர்வாழ்ந்துள்ளனர். அவர்கள் தமது குரவர்கட்கு முழு நம்பிக்கையோடு அனைத்தையும் சமர்ப்பிக்கின்றனர்; காரணம், குரு ஸேவையால் தமக்குப் பல பிறவிகளை எடுத்துழலும் பாடு நீங்கும் என்பதே. ஞானம் புகும்போது, பிழைபட்ட உணர்ச்சி அழிகிறது; ஜீவனும் ஆன்மாவும் ஒன்ருகக் கூடி வாழத் தொடங்குகின்றன. இந்திரியங்களாகிய கதவுகள் மூடப்படுகின்றன. கருமத்தின் கால்கள் முறிகின்றன, மனத்திலுள்ள துயரம் ஒழிக்கப்படுகிறது. துவிதம் என்பது பஞ்சப்படி (பஞ்சகாலத்து மக்கட்குக் கிடைக்கும்படி) யளவிற்குச் சுருங்கிவிடுகின்றது ஆன்ம ஞானத்தின் வீரத்தால் சமநிலை ஏராளமாக வருகின்றது. கருவம் ஓடிவிடுகிறது மித்தை நாசமுறுகின்றது ஆன்ம உணர்வைத் தவிர வேறோர் உணர்ச்சியும் இருப்பதில்லை. உலக வாழ்விற்குரிய பின்னல்கள் அறுபடுகின்றன. தவருன செயல் அனைத்தும் தூய்மையாக்கப்படுகின்றன. எங்கும் பரந்த பிரம்மத்தினை ஒருவன் தழுவுகிருன். இந்த ஞானத்தைப் பெற்றதும், உலக வாழ்க்கைக்குரிய செயல்களை இயற்றும் திறமையை ஊட்டும் பிராணன் முடமாகின்றது. இந்த ஞானத்தின் ஒளி புத்தியின் மீதுள்ள எல்லா மாசுகளையும் போக்குகிறது; ஜீவன் ஆனந்தமென்னும் தொட்டிலில் அமர்ந்து யதேச்சையாக ஊசலாடிக்கொண்டுள்ளது. இத்தகைய ஞானம் தூய்மைக்கு உறைவிடம்; அத் தூய்மை இந்திரிய விஷயங்களால் மறைக்கப்பட்டுள்ள மனத்திற்குப் படிகம் போன்ற தெளிவையும் பிரகாசத்தையும் அளிக்கின்றது. ஆன்மாவில் உண்டாக்கப்படும் 'நான் ஜீவன்' எனும் உணர்ச்சியும், அதனுல் தொடங்கும் தாமதமான க்ஷயமும் இந்த ஞானத்தின் முன்னிலையில் நீக்கப்படுகின்றன.

இந்த ஞானத்தைப்பற்றிப் பூரணமாக வருணித்தல் இயலாது; ஆனல் ஒரு சில விஷயங்களைக் கூறுகின்றேன்; நீங்கள் ஊனக் கண்ணுற் காணக்கூடிய யாதொன்றும் இதில் இல்லை. ஆயினும், ஞானம் உடலில் முளைக்கத் தொடங்கும்போது, இந்திரியங்களாலே இயற்றப்படும் எல்லாச் செயல்களையும் அது மாறுபடுத்துகின்றது. மரங்களில் தோன்றும் மலர் வசந்த காலத்தின் வரவைக் குறிக்கின்றது; அதுபோல் சில செயல்கள் ஞானத்தின் வளர்ச்சிக்கு அறிகுறியாகின்றன. நிலத்தினடியில் உள்ள வேர்க்கு நீர் பாய்ச்சும்போது அது மேலே கிளம்புகின்றது, பின் மரம் வளர்கின்றது, அதிலிருந்து பல கிளைகளும், பின் மலர்களும் கனிகளும் வருகின்றன; அதுபோல் நிலத்தின் செழிப்பிற்கு முளைகளின் இயல்பே அறிகுறியாகின்றது. மக்களின் செழிப்பை அவர்கள் செயல்களை இயற்றும் வழியிலிருந்தே அறியலாகும். மரியாதையும் உபசரணையும் அன்பின் இருப்பை உணர்த்தும் புறக்குறிகளாகும்; ஒரு ஞானியைச் சந்தித்ததும் மனதிற்குச் சாந்தம் உண்டாவது போலவும், மறைந்து கிடக்கும் ஒரு கற்பூரத்துண்டு அதன் மணத்தாற் கண்டுபிடிக்கப்படுதல் போலவும், விளக்கொளியை அதனை மூடும் கண்ணுடி தடைப்படுத்தாதது போலவும், உள்ளே நிகழும் ஞான வளர்ச்சிக்கு வெளியிலே ஒன்றிக்கு மேற்பட்ட புறக்குறிகள் தோன்றுகின்றன. (இந்திரிய சம்பந்தமான) எவ்வித போகமும், ஞானம் முளைக்கத் தொடங்கியவனுக்குச் சுவையற்றதாகிறது. எவ்விதப் புகழும் ஒரு சுமையே; எவனேனும் அவனுடைய குணங்களை வருணிக்கும் போதும், அவனை மதிப்பிற்குரியவனென்று நிலைநாட்டும்போதோ, அவனது மகிமையை வேறுவகையிலே பாராட்டும்போதோ, அவன் புலியைக் கண்ட மானைப்போலும், ஆற்றின் நடுவே சுழியில் அகப்பட்ட நீந்துபவனைப் போலவும் பயமடைகிருன். மக்களது

புகழால் அவனது மனம் துயருறுகின்றது, எவ்விதப் பெருமையையும் தன்னருகே வர அவன் அனுமதிப்பதில்லை. தனக்கு மரியாதை அளித்தலைக் காணத் தன் கண்ணைப் பயன்படுத்தவோ தனது புகழைக் கேட்கத் தன் காதுகளைப் பயன்படுத்தவோ அவன் பிரியப்படமாட்டான். பிறர் தன்னை இன்னான் என்று அறிந்து கொள்ளுதலையும் அவன் வேண்டான். இக்காரணம் பற்றியே அவன் பிறரது உபசரணையை விரும்பான், மரியாதையை ஏற்கமாட்டான், சாதாரணமான வணக்கமும் அவனுக்குப் பாரமாகும். சரஸ்வதிக்கு ஒப்பான ஆழ்ந்த ஞானம் தன்னிடம் இருப்பினும், மக்கள் தன்னை மதிப்பாரோ என்று அஞ்சி, அதனால் ஒரு பேதையைப் போல் ஒழுகுவான்; தன் சாமர்த்தியத்தை அவன் ஒரு நாளும் காட்டான். அவன் தனது திறமையை ஒளித்து, புத்தியற்றவனைப் போல ஒழுகுவான். மக்கள் அவனைப்பற்றிப் பேசுவராயின், அவன் மகிழ்ச்சியற்றவனாவான். இக்காரணம் பற்றியே அவன் விஞ்ஞான சாஸ்திரத்தின் வெற்றிகரமான செயல்களிற் பிரியமுடையவனாகான்; அவன் சமாதானத்தைப் போற்றுதலில் நாட்டமுடையவனாவான். உலகம் தன்னை அவமதிக்க வேண்டும் என்றும், எல்லா உறவினரும் தன்னைக் கைவிட வேண்டும் என்றும் நெஞ்சார விரும்புவார். உள்ளத்தே தனக்குரிய உயர்ந்த செயலிலே முழுதும் ஈடுபட்டிருப்பினும், வெளியிலே மிக மிகச் சோம்பலுள்ளவன் போலவே தோன்றுவான். அவன் இம்மாதிரி ஒழுகுவதற்குக் காரணம், அவன் உயிருள்ளவனா அற்றவனா என்று கூட மக்கள் ஆச்சரியத்தோடு தன்னை நோக்குவதை விரும்புவான். அவன் தானே நடந்து கொண்டிருக்கிறானா, காற்று அவனை நடத்திக் கொண்டு போகிறதா என்ற சந்தேகம் கிளம்பும் படிக்கும் தோன்றுவான். தனது (உலக) வாழ்வு முடிவுக்கு வருவதில் சிரத்தையுள்ளவனாவான். எந்த உயிர்ப்பிராணியும் தன்னைக் கண்டு அஞ்சுதலை அவன் விரும்பான். இதுவே அவனது இடைவிடாத பிரார்த்தனையாகும், இதைக் கருதியே அவன் தனித்து விலகியிருத்தலை நாடுவான். ஒருவரும் இல்லாத ஓரிடத்தைச் சார்வதில் பேரானந்தம் உறுவான். அவன் காற்றோடு நட்புக் கொள்வான், வானத்தோடு பேசிக் கொண்டிருப்பான். மரங்களே அவனுடைய இனிய வாழ்க்கைத் தோழர்களாகும். புகழையும் பெருமையையும் இம்மாதிரி ஒதுக்குபவன் எவனோ அவனை ஞானம் பெற்றவனாக எண்ணிக்கொள்ளலாகும்.

டம்பமின்மையென்னும் குணத்தின் பொருளை இனி விளக்குகிறேன். ஓர் உலோபி, தன்னைக் கொல்வதாகப் பிறர் பயமுறுத்தும் போதும், தானாகவே தனது சேமிப்பை வெளிக்காட்டமாட்டான்; அதுபோல, உயிர்க்கு ஆபத்து வரும்போதும் ஞானி தான் செய்த நற்செயலை ஒருக்காலும் உரையான். சேட்டையுள்ள பசு தனது பாலை உள்ளிழுத்துக் கொள்வது போலவும், முதிர்ந்து வரும் தனது முதுமையினைத் தாசி மறைப்பது போலவும். காடு வழியாகச் செல்லுங்கால் ஒரு பணக்காரப் பிரயாணி தனது செல்வத்தை மறைத்து வைத்துக் கொள்வது போலவும், நற்குல மங்கையொருத்தி தனது அவயவங்களை மூடிக் கொளவதில் எப்போதும் ஜாக்கிரதையாய் இருப்பது போலவும், குடியானவன் விதையை விதைத்தபின் அதனை மண்ணால் மூடிவைப்பது போலவும், அவன் தான் இயற்றியுள்ள அறச் செயல்களையோ நற்செயல்களையோ மறைத்துக் கொள்வான். அவன் தன்னைப் பொம்மை போல அலங்கரித்துக் கொள்ளான். தனது பெருமையைப் பேசமாட்டான். எவனிடத்தும் தனது தான தருமங்களைப் பற்றியோ தனது கடமைகளை இயற்றி வருதலைப்பற்றியோ அவன் பேசமாட்டான். எம்மனிதனுக்கும் தான் முன்பு செய்த நன்மையைப்பற்றி நினைப்பூட்டமாட்டான். தனது படிப்பைப் பற்றிப் பெருமை கொள்ளவும் மாட்டான். புகழுக்காகத் தனது ஞானத்தை அவன் விற்கமாட்டான். தனது சொந்தத் தேவைகள் சம்பந்தப்பட்டமட்டில் அவன் ஓர் உலோபியைப்போல் நடந்து கொள்வான்; ஆனால் பிறர்க்குக் கொடுக்கும்போதோ, தனது கடமைகளை இயற்றிவரும்போது ஏற்படும் தியாகச் செயல்கட்காகவோ அவன் தனது சொத்தை முழுவதும் செலவு செய்யத் தயாராயிருப்பான். அவன் இழிவானவனைப் போல் வாழ்வான். தனது உடலையும் பட்டினி போடுவான்; ஆனால் தரும விஷயத்தில் அவன் அனைவரையும் மிஞ்சிவிடுவான். தனது கடமைகளை இயற்றும்போது மிக்க சிரத்தையுள்ளவனாவான், பிறர்க்கு உதவி செய்ய நேரும் சந்தர்ப்பம் ஒன்றையும் தவற விடமாட்டான். ஆத்ம ஞானத்தைப்பற்றிப் பேசுவதில் எப்போதும் சுறு சுறுப்பாய் விழிப்பாய் இருப்பான்; மற்ற விஷயங்களில் பேதைபோல் நடிப்பான். வாழைமரம் கன

மற்றதாயும் உட்குழலாயும் இருப்பினும், பல திருப்தி யளிக்கக்கூடிய கனிகளை அது ஈனும். மேகம் உருவத்தாற் சிறியதாய், ஒரு காற்றுக்கு முன் நிற்க மாட்டாததாய்த் தோன்றலாம்; எனினும் அது தொடர்ந்து பெருமழையைச் சொரிய வல்லதாகும்; அது போல் வெளிப் பார்வைக்கு ஏழைபோலும் அற்பனைப்போலும் தோன்றினலும், ஆத்ம ஞானம் பெற்ற ஒரு புண்ணிய புருடனது தரிசனம் அவனது நெஞ்சத்தில் ஆனந்தத்தை நிரப்பும். இக்குணங்கள் முழுமையும் ஒருவனிடம் காணப்படுமாயின், ஆத்மஞானம் உதயமாயிற்று என்று ஊகிப்பது முறையாகும்.

—தியானேஷ்வர் மஹாராஜ்

குருதேவர் உபதேச மணிமாலை

(228-ம் பக்கத் தொடர்ச்சி)

933—நித்திய சித்தர்

புடன்முத லவற்றிற் காய்முதற் ளேன்றிப்
  பூவிதழ் வெளிப்படல் போலப்
புடவியிற் பிறக்கும் பொழுதிலே பொருந்து
  பூரண ராய்ப்பிறப் பவர்கள்
திடமுறு நித்த சித்தரென் றறிக,
  தெரிந்தவர் செய்திடு முயற்சி
மடமுறு பவரை வழிப்படுத் திடவே,
  வழுத்திய சித்தரை வகையார். 189

(புடவி-பூமி. மடம்-அஞ்ஞானம். சித்தர் ஐவகையார்.)

947—ஈசுவர தரிசனப் பயன்

இறைதரி சனத்தை யெய்திய பின்னர்
  எங்குமெய் பொருளிலு மன்னேன்
உறைகுவ னெனவே தோன்றிடும் பத்தர்க்
  குயர்ந்ததோர் தோற்றமு முண்டு;
கறைதரு காம காஞ்சனத் தாசை
  கழன்றுளந் தூயசாத் துவிகம்
நிறைதரு பத்த ரிடமிதன் மேலாம்
  நிகரறு தோற்றமுண் டாமே. 190

(அன்னேன்-கடவுள். கறை-மாசு, அழுக்கு)

949—மாயையின் அவசியம்

ஒளிர்தனிப் பொன்னனகை செய வியலா
  தொருங்கதிற் ருழ்ந்ததொருலோகம்
மிளிர்உறக் கலக்க வேண்டுமப் படிபோல்
  மெய்யுட னிருப்பது வரையும்
நளிருட னிலக ணடத்திட மாயை
  நாடிட வேண்டுமோர் சிறிதே,
இளிவுறு மாயை யறக்கடந் தவன்மூ
  வெழுபகன் மேலுயிர் வாழான். 191

(மிளிர்-ஒளி. மெய்-சரீரம். நளிர்-குளிர்ச்சி. இளிவு-இகழ்ச்சி. அறக் கடந்தவன்-முழுதும் கடந்தவன். மூவெழு பகல்-21 நாள்.)

950—ஞானியிடம் சிறிதே அகங்காரம்

பயிலுடனின்றும் பருந்தலை வெட்டப்
  பட்டபின் னுஞ்சில நேரம்
உயிருள தென்ற குறிக்கிலக் காக
  உறுதக ருடலசைந் திடுமால்;
செயிரறு ஞானி தனதகங் காரம்
  சிதையினுஞ் சிறிதிருந் திடுமிவ்
வயிலுறு வாழ்க்கைக் காகவென் றுலும்
  அவன்றனைப் பிணிக்ககி லாதே. 192

(பயில் உடல் நின்றும்-தங்கும் உடலிலிருந்து; குறிக்கு இலக்காக-அடையாளத்திற்காக. செயிர்-குற்றம். அயில் உறு-உண்ணுதல் பொருந்திய. பிணிக்ககிலாது-கட்டுப்படுத்த முடியாது.)

951—முற்றிய பாக்கைப்போல் ஞானி

தோன்றிய உடம்பு மீளவு மழியும்,
  தூயவான் மாவழிந் திடாது,
ஆன்றமெய் யீசன் றரிசன முற்றுல்
  அழிவிலான் மாவுட லிவைதாம்
என்றிட வேரு யியல்வன வென்னும்
  இணையிலா ஞானமு முதிக்கும்,
சூன்றரு கொட்டைப் பாக்கினிற் ருேலுள்
  கொட்டையும் வேறுறல் போல. 193

956—ஞானியின் பற்றின்மை

தவளையின் குஞ்சு வால்விழுந் தாற்பின்
  றரையினு நீரினும் வாழும்,
கவலையஞ் ஞான வால்விழுந் தாற்பின்
  கைவரு முத்தியு மொருவன்
அவலமற் றதனை யடைந்திடி னன்மை
  யருள்பா னிடத்தினு மதுபோல்
தவலறு மிந்த வுலகினு மெளிது
  தங்கிட வல்லவ னவன். 194

(கைவரும்-கைகூடும். அவலம்-துயரம். தவல் அறும்-நீங்குதல் அற்ற.)

சுவாமி விவேகாநந்தரின் கடிதம்

சுவாமி இராமகிருஷ்ணாநந்தர்க்கு

டார்ஜீலிங்
ஏப்ரல் 20, 1897

அன்பார்ந்த சசி,

நீங்கள் அனைவரும் இதற்குள் சந்தேகமின்றிச் சென்னை போய்ச் சேர்ந்திருப்பீர்கள். பிலகிரி என்பார் உன்னை நிச்சயமாக நன்கு பாதுகாத்து வருகின்றார் என்றும், சதாநந்தா உனக்குப் பணிவிடை செய்து வருகிறான் என்றும் நினைக்கிறேன். சென்னையில் ஒரு சிறிதும் இராஜஸமின்றி முற்றிலும் சாத்துவிக முறையில் பூஜை நடைபெற வேண்டும். அளசிங்கா இதற்குள் சென்னைக்குத் திரும்பி இருக்கலாம். எவரோடும் சச்சரவு செய்யாதே—எப்போதும் சாந்த நிலையில் இரு. தற்சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணரை மட்டும் பிலிகிரியின் இல்லத்தில் பிரதிஷ்டை பண்ணி, பூஜையை நடத்தி வருக. பூஜை வெகு விரிவாகவும் நீண்ட நேரம் பிடிப்பதாகவும் இருக்காமற் பார்த்துக் கொள்க. இவ்வாறு மிச்சம் பிடிக்கும் பொழுதை வகுப்புகள் நடத்துவதற்கும், சிறிது பிரசார வேலை செய்வதற்கும் பயன்படுத்தல் வேண்டும். உன்னால் இயன்ற வரை பலர்க்கும் தீக்ஷையளித்தல் நன்றே. இரண்டு பத்திரிகைகளின் வேலையையும் மேற்பார்த்துக் கொள்க, உன்னால் கூடிய மட்டும் அதற்கு உதவி செய்க. பிலிகிரி என்பவர்க்கு இரு விதவைப் பெண்கள் உளர். அவர்கட்கு நீ அன்போடு கல்வி யூட்டுக; அவர்கள் மூலம் அம்மாதிரியான இன்னும் பல விதவைப் பெண்கள் தமது மதத்தில் இருந்து கொண்டே ஒரு சிறிது ஆங்கிலமும் சமஸ்கிருதமும் கற்பதற்கான முயற்சிகளைத் தனியாகச்செய்க. ஆனால் இவ்வேலை முழுவதும் தூரத்திலிருந்தே செய்தாக வேண்டும். இளம் மங்கையர் முன்பு வெகு ஜாக்கிரதையாயிருத்தல் வேண்டும்: ஒரு முறை தவறி வீழின், தப்பிக்கும் வழி இல்லையென்க; அப்பாவம் மன்னித்தற்கு அரியதாகும்.

அதிகாலையில் உனது நித்தியப் பூஜையையும் இதர கடமைகளையும் சுருக்கமாக முடித்துவிட்டு, பிலகிரி என்பவரையும் அவரது குடும்பத்தாரையும் ஒன்ருகக் கூட்டி, கீதை முதலான தூய சாஸ்திரங்களை அவர்கட்கு முன்பு வாசிக்கவும். இராதை, கிருஷ்ணன் இருவர்க்குமுள்ள தெய்விக அன்பைப் பற்றிப் போதிப்பதற்குச் சிறிதும் அவசியம் இல்லை. சீதா-ராமரிடத்தும் ஹர - பார்வதியிடத்தும் உண்மையான பக்தி செய்தலைப் போதி. இவ்விஷயத்தில் தவறுதல் நிகழாதவாறு பார்த்துக் கொள். இராதைக்கும் கிருஷ்ணனுக்கும் இடையேயிருந்த தெய்விக உறவினைப் பற்றிய கதைகள் இளைஞரின் மனங்கட்குச் சற்றும் பொருத்தமற்றனவாம். இதற்கொரு சிறப்பான காரணம் யாதெனில் பிலிகிரியும் மற்ற இராமாநுஜ மதத்தினரும் ராமரை வணங்குபவராவார்; ஆதலால், அவர்கட்கு இயல்பாயுள்ள பக்தி நிலை ஒருக்காலும் குலையாதவாறு கவனித்துக் கொள்.

மாலை வேளைகளில் பொது மக்கட்கு அம்மாதிரியான சிலஞான போதனைகளை அளிப்பாயாக; இவ்வாறு செய்யின் வரவர 'மலையையும் தாண்டிவிடலாகும்'.

பூரணமான தூய்மை எப்போதும் சூழ்ந்திருக்கும் படிக்கும், வாமாசாரம் இம்மி கூட உள்ளே புகாதபடிக்கும் பார்த்துக்கொள். மற்றவைகட்குப் பகவானே உனக்குத் துணையாவார், அச்சம் வேண்டாம். பிலிகிரி என்பவர்க்கு மரியாதையார்ந்த என் நமஸ்காரங்களைச் செலுத்துக, அவர் போன்ற எனது அடியார்கட்கும் அன்பைச் செலுத்துக.

எனது பிரியத்தையும் அன்பையும் ஆசிகளையும் ஏற்பாயாக.

உனது பிரியமான
விவேகாநந்தா

சிறப்பாக எனது அன்பையும் நமஸ்காரத்தையும் ஆசீர்வாதத்தையும் டாக்டர் நஞ்சுண்ட ராவ் என்பவர்க்கும் செலுத்துக; அவர்க்கு உன்னால் இயன்ற மட்டும் உதவி புரிக. தமிழர்க்குள்ளே சமஸ்கிருதக் கல்வியை முக்கியமாகப் பரப்புவதற்காக உன்னாற் கூடிய மட்டும் முயலுக.

[பிலிகிரி—பிலிகிரி ஐயங்கார், சென்னையில் ஒரு சட்டவாதி, சுவாமி விவேகாநந்தரைப் பெரிதும் புகழ்ந்தவர்களில் ஒருவர். இவரது 'காசில் கெர்னன்'என்னும் பெயர் கொண்ட 'ஐஸ்ஹௌஸ்' கட்டிடந்தான், சென்னைக்கு சுவாமி விஜயஞ் செய்த காலத்தில் அவர் தங்கியிருந்தமையால் புனிதம் பெற்றது. சுவாமி இராமகிருஷ்ணாநந்தர் சுமார் பத்தாண்டு காலம் இங்கே தங்கியிருந்து சென்னை இராமகிருஷ்ண இயக்கத்தை நிறுவியும் நடத்தியும் வந்தார்.

அளசிங்கப் பெருமாள் என்பவர் சுவாமி விவேகாநந்தரிடத்துப் பெரிதும் ஈடுபட்ட ஒரு சீடர், சென்னையைச் சார்ந்த இளைஞரான சீடர் கூட்டத்தைச் சார்ந்தவர், அமெரிக்க பிரயாணத்திற்குப் பணம் சேர்த்துக் கொடுத்து உதவிய அன்பர்.

டாக்டர் நஞ்சுண்ட ராவ் — சென்னையிலிருந்த ஒரு பிரபலமான் மருத்துவர், சுவாமி விவேகாநந்தரிடத்து ஆர்வங்கொண்ட ஒரு சீடர்.]

ஞான வாழ்வு

(சுவாமி விஞ்ஞானநந்தர்)

பகவான் எங்கும் உள்ளவர், எல்லாம் அறிந்தவர். அவர் நமக்கு அளியாதது யாதொன்றும் இல்லை. நன்றியார்ந்த ஒரு துணைவரைப்போல மக்கள் விரும்புவதை எல்லாம் அவர் கொடுப்பார். ஆதலால் நாம் அவரிடம் எந்த வரத்தையும் கேட்கக் கூடாது. ஈச உபநிடதம் ‘தேன தியக்தேன புஞ்சீத’ (தியாகத்தால் அதை அனுபவி) என்று போதிக்கிறது. பகவான் சந்தோஷமாகக் கொடுப்பதை நாம் அனுபவிக்கவேண்டும் என்பதும், அதோடு மட்டும் திருப்தியடையவேண்டுமென்பதும் அதன்பொருள். ஏதாவது ஒரு சடப்பொருளைப் பெறத் தெய்வத்தினிடம் பிரார்த்திக்கும்போது அத்தெய்வம் இரு பக்கங்களிலும் கூரிய முனையையுடைய ஒரு வாள் போன்ற ஒன்றை நமக்குத் தருகின்றது; அதாவது, நாம் அதைத் தக்கவாறு பயன்படுத்தினால் நமக்கு நன்மையை அளிப்பதாயும், அதை முறைமீறிப் பயன்படுத்துவோமாயின் நமக்குக் கேடு தருவதாயும் இருக்கும் ஒன்றையே நமக்குத் தெய்வம் தருகிறது.

ஒரு மஹா புருஷருடைய இலக்ஷணங்களில் ஒன்று யாதெனில் அவருடைய தீர்க்க தரிசன மொழிகள் சொன்னபடியே எப்போதும் உண்மையாகும். அவர்கள் சொல்வதெல்லாம் நிச்சயமாக நடக்கும்; ஒரு சாது புருஷரின் மெய்யான இயல்புயாதெனில், நீ அவனுக்குப் பத்து அடிகள் கொடுக்கினும், அவர் அதையெல்லாம் புன்சிரிப்போடு பொறுத்திருப்பார், மனங் கலங்காதவராயிருப்பர். பிருகு என்னும் பெரிய முனிவர் என்ன செய்தார் என்பதைப் பாருங்கள். விஷ்ணுவே தெய்வங்கட்குள் மிகவுயர்ந்த ஒருவரா என்பதைச் சோதிப்பதற்காக, அம்முனிவர் விஷ்ணுவின் மார்பின் மீது உதைந்தார். அதனால் ஒரு சிறிதும் கோபங் கொள்ளாது விஷ்ணு மிக்க அன்போடும் மரியாதையோடும் அவரை வரவேற்றார். பிருகு உடனே விஷ்ணு பகவானிடம் ஈடுபட்ட ஒரு பக்தரானார். ஒரு பூரண சாதுவாதல் உண்மையாகவே மிக்க கடினமாகும்; அவர் தமது மனம், மொழி, செயல் எனும் மூன்றிலும் முற்றிய அடக்கம் உடையராதல் வேண்டும்; அமைதியும் உறுதியும் சிரத்தையும் பெற்றவராதல் வேண்டும்.

ஒரு நாள் தக்ஷிணேசுவரத்தில் குருதேவர் (ஸ்ரீ ராமகிருஷ்ணர்) ஓர் ஆங்கிலப் புத்தகத்தை என்னிடம் கொடுத்து, அதை வாசித்து அதை விரிவாகக் கூறுமாறு சொன்னார். அப் புத்தகத்தில் பின்வருவது காணப்பட்டது. “உண்மை பேசுக; பிறர்க்குரியதில் ஆசை வையாதே; இந்திரியங்களை அடக்குக”. இதைக் கேட்டதும் குருதேவர் ஒரு பையனைப்போலக் கிளர்ச்சியடைந்து, தமது பெருமகிழ்ச்சியை வெளியிடலானார். குருதேவர் அன்று பெற்ற ஆனந்தம் எனது உள்ளத்தில் இன்றும் ஆழ்ந்து பதிந்துள்ளது. ஒருவர் அம்மூன்று விஷயங்களிலும் பூரண நிலையை அடைந்தால் அவர் பகவானை அடைவது நிச்சயம்.

காமம், குரோதம் முதலியன அடங்காத போது பகவானை ஒருக்காலும் தரிசித்தல் முடியாது. பிரம்மசரிய நிலையினின்றோ, நிறையினின்றோ (மனஅடக்கம், கற்பு) தவறுவோனைத் தேவி (மஹாமாயை) ஒருக்காலும் மன்னிக்க மாட்டாள். நல்ல தூய தன்னலமற்ற வாழ்வு வாழ்தலும், அனைத்திற்கும் மேலாகப் பணி செய்தலும் ஒவ்வொருவர்க்கும் கடமையாம். ஏழைகட்குப் பணிசெய்க, ஆனால் யாதொரு பதிலையும் எதிர்பார்க்க வேண்டாம். எந்த நிலையில் ஒரு மனிதன் வாழ நேரினும், தன் மதத்தில் நம்பிக்கை, பிறமத வெறுப்பின்மை, எதுவரினும் உண்மையினின்றும் பிறழாமை முதலிய குணங்கள் அவனிடம் இருப்பின், தேவி அவனைப் படிப்படியாக முன்னேறும்படிச்செய்வாள். ஆனால் இதற்கு முழுமன அடக்கப் பயிற்சி வேண்டும். அத்தகைய பயிற்சியை வெற்றிகரமான முறையில் ஒருவற்கு அளிக்கும் வகையை இந்துக்கள் நன்கறிவார். வெற்றியடையும் வழியாதெனில்; பிரம்மசரியம், பிறர் பொருளிற் பற்றின்மை, தானம் வாங்காமை என்பவற்றைப் பழகுதலே. உடலையும் மனத்தையும் உண்டாக்கி வரும் உணவு தூயதாயும் நலந்தருவதாயும் இராவிடின், மனவளர்ச்சி எங்ஙனம் கைகூடும்? வேரிலோ மூலத்திலோ ஒரு குற்றத்தையுடைய எதுவும் அதற்கிணங்க ஒரு குற்றமுடைய பலனை அளித்துத்தான் தீரும்.

தானம் வாங்குதல் வாங்கினவனைச் சிறியோனாக நினைக்கச்செய்யும், தானங் கொடுத்தவனுக்குக் கட்டுப்படும் தன்மையையும் உண்டுபண்ணும். தனது சொந்தச் சுமையைத் தூக்க முடியாதபோது பிறரது சுமையையும் தன் தோளில் தூக்கி வைத்துக் கொள்வது போலாம்! ஆதலால் பணமும் (வேறு தானங்களும்) பொது மக்களிட

மிருந்து பெற்றுக் கொள்வது தடுக்கவொண்ணுதபடி அவசியமாகும்போது, என்ன காரியத்திற்காக அப்பொருள்கள் கொடுக்கப்படுகின்றனவோ, அதே காரியத்திற்கு அவற்றைக் கண்டிப்பாகப் பயன்படுத்துவது முற்றிலும் அவசியமாகும். குருதேவர் எங்களிடம் "காய்கறி வாங்கக் கொடுத்த பணத்தை மீன் வாங்க உபயோகிக்காமலும், அம்மாதிரியே மீனுக்கெனக் கொடுத்த பணத்தைக் காய்கறிக்கு உபயோகிக்காமலும், ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்" என்று சொல்வதுண்டு.

ஒருவன் தனது மனச்சாட்சியின் வழக்குக்கு ஏதேனும் ஒரு காரணங்கூறிச் சமாதானம் பண்ணிவிட்டுத் தனது தவருன செயலுக்கு உடந்தையாயிருத்தல் தன்னையே ஏமாற்றிக் கொள்ளுதலாகும். தாழ்ந்த மனதை எவ்வாருவது அனுமதிக்கச் செய்வதிற் பயனில்லை. ஏனெனில், பின் ஒரு நாள் உயர்ந்த அறிவு விழித்தெழுந்து அதற்குக் காரணங்கூறும்படி வற்புறுத்தும்; அதற்கு அவன் பதிலுரைக்க முடியாதவனுயின், வரும்பலனை அனுபவித்தேயாக வேண்டும்.

ஆன்ம ஞானம் பெறுதற்கு ஏற்ற நிலையில் உடலைப் போற்றி வைத்தற்கு அவசியமான அளவிற்கு வேண்டியதோடு திருப்தியடைந்த பின், ஒருவன் சற்றும் தன்னலமின்றி ஈசனது பணியில் ஈடுபடல்வேண்டும். ஐம்புல ஆசை உள்ளத்துக் குடிகொள்ளும் வரை, உண்மையான வைராக்கியம் என்னும் செல்வத்தைப் பெற இயலாது. எல்லா ஆசைகளையும் துறந்தபின்பு மட்டும் ஒருவன் உய்வடைவான். 'போதும் என்ற நிலை மனத்திற் புகுந்தபின், யானை குதிரை அணி புகழ் என்னும் செல்வம் தூசியைப் போன்று அற்பமாகத் தோன்றும்".

நமது சிகர ஜோதி

ஞானியின் கவியும் கவியின் ஞானமும்

கம்பன் பாரதி காளிதாசன் முதலிய கவிஞர் ஞானத்தைப் பற்றித் தம் நூல்களில் பேசுகின்றனர், தமது கருத்துக்களை இன்பம் பயக்கும் முறையிலே வெளியிடுகின்றனர்; அதுபோன்றே மெய்ப்பொருளை நேரிற்கண்டு அனுபவித்த ஞானிகளும் அன்பர்களும் தம் அனுபவங்களைக் கவி வாயிலாக வெளியிடுகின்றனர். இவ்விருவகையாரின் பாடல்களிலும் ஞானக் கருத்துக்களும் அனுபவங்களும் ஒரே மாதிரியாக வெளியிடப்படுதலின், கூர்ந்து நோக்கியறியும் பண்பிலாதார் வண் கவிஞரை அறிஞராகக் கருதி மயங்குகின்றனர். கருத்தின் அழகும், கற்பனையின் மாண்பும், உணர்ச்சியின் இனிமையும், வாசிப்போரது மனத்தைக் கவரும் சக்தியும் ஒரு கவிஞனுடைய ஞானப்பாடல்களிலே காணப்படுகின்றமையால், கவிஞனை ஏன் ஞானியாகப் பாராட்டலாகாது என்று வழக்காடுகின்றனர். காவிய ரசத்தை அனுபூதி ரசமாகப் பிழைபடப் பாவித்து, கவிஞரை ஞானிகளாகப் போற்றி வழிபடவும் செய்கின்றனர். இருவகையினரின் உணர்ச்சிகளும் அனுபவங்களும் சமமாகும் என்கின்றனர். ஒரு ஞானியின் கவிக்கும் ஒரு கவியின் ஞானப் பாடலுக்கும் வேறுபாடில்லை என்பது அன்னுருடைய கருத்தாகும். ஓர் உதாரணத்தால் விளக்குவாம். கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் சமயங்களின் சமரச நிலையைப் பின்வருமாறு கூறுகிருர்: 'கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம், எல்லையில் மறைகளாலும் இயம்பரும் பொருள் ஈதென்னத், தொல்லையில் ஒன்றேயாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப், பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும் போல் பரந்ததன்றே'—பலவேறு துறைகளிலும் ஒரே நதியின் வெள்ளம் பரந்திருப்பது, பல பெருஞ் சமயங்களிலும் ஒரே பரம்பொருளின் உண்மையாகிய ஞானனந்த வெள்ளம் பரவியிருப்பதை ஞாபகப்படுத்துகிறது என்பது கருத்து. மெய்ஞ் ஞானியரான தாயுமானுரும் 'வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கில் விளங்கு பரம்பொருளே நின் விளையாட்டல்லால் மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன வாரிதியின் நதித்திரள் போல் வயங்கிற்றம்மா' என்னும் பாடலில் ஸர்வ சமய சமரஸ நிலையை வருணிக்கின்ருர். பல நதிகளும் கடலிற் போய்ச் சேர்வது போல, பல சமயங்களும் மோன நிலையில் முடிந்து ஒன்ருகின்றன என்பது இதன் கருத்து. இருவரும் ஒரே கருத்தைத் திறம்பட விளக்குகின்றனர். இரண்டு பாடல்களும் கருத்துப் பற்றிய வரை சமமாயினும், ஒன்று கவியின் பாடல் மற்ருென்று

ஞானியின் பாடல் எனும் வேறுபாடு காணுதற்குரியதாகும்.

இவ்வேறுபாட்டைக் காண முதலில் கவி எவ்வாறு கவி பாடுகிறான், அவனது நோக்கம் யாது என்பதை அறிதல் வேண்டும். ஒரு கவி சட இயற்கையையோ மனித இயற்கையையோ உற்று நோக்கிச் சிந்திக்கிறான். அப்போது அவனது நுண்ணிய அறிவிலே ஓர் உயர்ந்த கருத்து உதயமாகின்றது. உதித்ததும், அதற்கேற்ப அவனது நெஞ்சத்திலே உணர்ச்சி ஊறிக்கொண்டே வருகிறது, அக் கருத்தின் ரசத்தைக் கவி நன்கு அனுபவிக்கிறான். பின்பு அதை இயைந்த சொற்களால் வெளியிட முயல்கிறான். வெளியிடுங்கால் அதனைச் சுவைபட அழகுறச் செவிக்கினிய சிந்தைக்கினிய முறைகளைக் கருவியாகக் கொண்டு தன் கருத்தை வெளிப்படுத்துகிறான். கருத்துக்களும் உணர்ச்சிகளும் உள்ளத்து எழுகின்ற நிலைமையிலே அவ்வண்ணமே பாடலாக வெளியிடப்படுகின்றன. அப்பாடலை வாசிப்போன் மொழிகளைக் கொண்டு சிந்திக்கும் போது, கவிஞனது, உள்ளத்து எழுந்த காட்சியும் உணர்ச்சியும் அவனது உள்ளத்தும் தோன்றி விடுகின்றன; அதே ரசத்தை அவனும் அனுபவிக்கிறான். ஒன்பது வகைப்பட்ட காவிய ரசங்களுள் எதற்கும் பொது இந்த அனுபவம். சரயு நதியின் வெள்ளம் தோன்றிப் பல துறைதொறும் பரந்த காட்சியைச் சிந்தித்த கவிஞனது உள்ளத்துப் பல சமயங்களுள்ளும் கூறப்படும் பரம்பொருள் ஒன்றே என்ற ஞானக்கருத்து உதித்தது; அதனைச் சிந்தித்து அதன் அழகையும் இன்பத்தையும் சுவைத்து, அந்த அனுபவத்தைப் பிறரும் துய்க்குமாறு அதனை அவன் ஒரு பாடலில் அழகும் இன்பமும் தெளிவும் பொருந்த அமைத்தான். ஆதலால் ஒரு கவிக்கு வேண்டியவையாவன: (1) பொருள்களை ஊடுருவி நோக்கி ஓர் உயர்ந்த கருத்தைக் காணும் நுண்ணிய மதி (2) பாவனையால் அக்கருத்தின் அழகினை நன்கு அனுபவிக்கும் திறன் (3) அனுபவத்தை அவ்வண்ணமே இயைந்த சொற்களால் சித்திரிக்கும் பழக்கம் ஆகிய மூன்றும். அறிவுத்திறன், உணர்ச்சித் திறன், சித்திரிக்கும் திறன் எனும் இம்மூன்றும் அவசியமாயினும், கவியெழுதுவதின் முக்கிய நோக்கம் அழகுமிக்க சொல்லோவியம் (சொற்படம்) வரைதலேயாம். ஓர் அறிஞர் கூறுகிறார்: 'அழகே கவியின் நோக்கம். அவன் அறத்தைப் பிரியத்தோடு நாடுவதும், அதனைக் கடமையாகக் கருதுவதனாலன்று, அதன் அழகிற்காகவே' என்று. ஒரு கவிஞன் கவியைப் படைக்கும் வகையினையும், அவனது நோக்கத்தையும் கண்டோம். இனி ஞானியின் முறையைக் கவனிப்போம்.

ஒரு ஞானி எவ்வாறு கவி அமைக்கிறான்? அவனது நோக்கம் யாது? ஒரு ஞானியும் உலகப் பொருள்களை உற்று நோக்குகிறான்; ஆனால் அவனது கூர்த்த நோக்கு அவற்றை ஊடுருவிச் சென்று, அவற்றின் ஸாரமற்ற தன்மையையும் நிலையின்மையையும், துயரத்தையும் சிந்தித்து, அவற்றிற்கு அப்பாலான அடிப்படை உண்மையினைக் காண்கின்றது. அதைக் கண்டதும் ஞானி பேரின்ப வெள்ளத்தில் ஆழ்கின்றான். அதே பேரின்பத்தைப் பிறரும் சுவைக்குமாறு அவ்வனுபவத்தை ஏற்ற சொற்களால் அணிபெற வெளியிடுகிறான். பரம்பொருளை நாடும் ஒரு பக்தனுக்கு உலகப் பொருள்களில் உள்ள அழகு நிலையற்றதாகவே தோன்றும்; ஆயினும் அவை இறைவனை ஞாபகப்படுத்தும் நிலையிலே, இறைவனுடைய குணங்களை விளக்குவதற்குப் பயன்படும் நிலையிலே, இறைவனை வழிபடுதற்குப் பயன்படும் நிலையிலே, ஸாரமுள்ளனவாயும் அழகுள்ளனவாயும் இன்பந்தருவனவாயும் காட்சியளிக்கின்றன. ஆண்டாள் தனக்கு நாயகனாகக் கருதிய இறைவனிடம் சென்று தனது தனித்துயரத்தை அறிவிக்குமாறு மேகங்களைத் தூதாக அனுப்புகிறாள். நம்மாழ்வார் எம்பெருமானிடத்துத் தாம் கொண்ட பிரேமையினை, தாயார் கேட்கும் பாசுரத்தால் 'கங்குலும் பகலும் கண்துயிலறியாள், கண்ண நீர் கைகளால் இறைக்கும்......செங்கயல் பாய்நீர்த் திருவரங்கத்தாய், இவள் திறத்து என் செய்கின்றாயே' என்கிறார். இப்பாடல்களைக் கேட்டுச் சிந்திக்கும்போது, இந்த மெய்யன்பர்களது உணர்ச்சியை ஒருவாறு வாசிப்போரும் பெறுகின்றனர்; அதனால் உயர்ந்த மனநிலையை அடைகின்றனர். உண்மையான இந்த அடியார்களின் பாடலைக் கற்பதின் பயன் இன்னது என்பதை அவர்களே கூறுகின்றனர்: 'புதுவையர்கோன் கோதை தமிழ் ஆகத்து வைத்துரைப்பாரவர் அடியாராகுவரே', 'சடகோபன்....சொன்மாலை... வல்லார் முகில் வண்ண வானத்து இமையவர் சூழ இருப்பர் பேரின்ப வெள்ளத்தே'. இதனால் ஞானியர்கள் எழுதும் பாடலின் நோக்கமும் பயனும் தெளிவாகும்.

இனி, கவிஞன், ஞானி எனும் இருவருடைய பாடல்கட்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கவனிப்போம். ஓர் உயர்ந்த உண்மையைச் சிந்திப்பதால் எழும் உணர்ச்சி

வெள்ளத்தை இருவரும் அழகிய சொற்களிற் புகுத்தி அதனை மக்கள் முன் வைப்பர். ஒரு சாதாரண கவிக்கு உண்மைப் பொருளைப் பற்றிய கருத்து ஒன்றே உணர்ச்சியை ஊறச் செய்தற்குப் போதியதாகும்; உண்மைப் பொருளை உணர வேண்டுமென்ற அவசியம் இல்லை. கவியின் கருத்து அவனது அறிவினின்றும் உதயமாகின்றது; ஆனால் ஞானிக்கோ நேர் காட்சியினின்றும் உதயம். கவியின் உள்ளம் எவ்வளவு உயர்ந்து பறந்தாலும் உலகப்பொருள்களின் மீதுள்ள இச்சைகளின் பிணிப்பால் அறிவுலகத்தைத் தாண்டி அப்பாற் செல்ல இயலாது; புற உலகத்தை மறக்கினும் அதன் பிரதிபிம்பமாய் அமைந்துள்ள, கற்பனையழகு மிக்க, சூக்குமமான அக உலகத்தை மறக்க அதற்கு ஒண்ணாது. ஞானியின் உள்ளமோ மன உலகத்தைத் தாண்டி, மெய்ப்பொருள் மெய்யன்பு பேரின்பம் ஞானபோதம் முதலிய அழியாத உண்மைகட்கு உறைவிடமாகிய ஞான உலகத்தில் உலவிவிட்டு, அங்கிருந்து பெற்ற அனுபவத்தையும் கருத்தையும் மன உலகிற்குக் கீழிறங்கிய பின் அழகுமிக்க இன்பமூட்டக் கூடிய சொற்களால் வெளிப்படுத்தும். கவியின் உள்ளத்து ஊறுவதோ சிற்றின்பம். புற உலகமோ அக உலகமோ சுரக்கும் இன்பத்தை அவ்வண்ணமே வெளியிடுவான் கவி; ஞானியோ உண்மையுலகைப் பற்றியதாகா தவற்றை அற்பமெனவும் இழிவெனவும் கருதி ஒதுக்குவான். கருத்தும் உணர்ச்சியும் மெய்ப்பொருளைப் பற்றியதாகும் போது எழும் இன்பத்தையே வெளியிடுவான்; அவை எவ்வாறு மனிதனிடத்தில் அமைய வேண்டுமோ அப்படி வெளியிடுவான். கவிக்குக் கருத்து எதுவாயினும், அதை உணர்ச்சி ததும்ப அழகுற அமைத்தலொன்றே போதும்; ஞானியோ உண்மைப்பொருளை உணர்ந்த பின்னர் உலகம் எவ்வாறு காணப்படுமோ, அதை ஆதாரமாக வைத்து, அதை ஒட்டித் தனது அனுபவத்தை இன்பம் பயக்கும் மொழிகளில் வெளியிடுவான். கவி உலவுவது கற்பனையுலகில், ஞானி உலவுவது மெய்ப்பொருள் உலகில். மனத்தைக் கற்பனை யுலகிற்கு ஏற்றுவான் கவி; ஆனால் ஞானியோ இலக்ஷியமான உண்மையைக் கீழுலகிற்குக் கொணர்வான். கண்ணிற்கு முன்னுள்ள உண்மையழகைக் கற்பனையின் சக்தியால் இலக்ஷியமாக்கிக் காட்டுவான் கவி; இலக்ஷியமாயுள்ள மெய்ப்பொருளின் அழகைச் சுவைத்து, அதைப் புற உலகிலும் உண்மையாகக் காட்டுவான் ஞானி. 'முன்னிக் கவிதை வெறி மூண்டே நனவழியப், பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம், நெட்டைக் கனவின் நிகழ்ச்சியிலே கண்டேன் யான்' என்பது போலக் கவி நனவுலகைக் கடந்து கனவுலகில் இன்பஞ் சுவைப்பான். 'மூலைக் கடலினை அவ்வான வளையம் முத்தமிட்டே தழுவி முகிழ்த்தல் கண்டேன், நீல நெருக்கிடையில் நெஞ்சு செலுத்தி, நேரங் கழிவதிலும் இளைப்பின்றியே, சாலப் பலபல நற்பகற்கனவில், தன்னை மறந்தலயந் தன்னில் இருந்தேன்' என்பான் கவி; அவன் காணுவது விழிப்பு நிலையில் இன்பக் கனவே. ஞானியோ நனவையும் கனவையும் கடந்து சமாதி நிலையினில் உண்மைப் பொருளைக் கண்டு அத்துய காட்சியின்பத்தைப் பருகுவான். 'மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசன் எந்தை இணையடி நீழலே' என்பான் ஞானி.

ஒரு சாதாரணக் கவிக்கும் ஞானிக்கும் உள்ள வேறுபாடு இவ்வாறிருப்பனும் ஒரு கவி ஞானியாயிருக்கலாம், ஞானியும் ஒரு கவியாயிருக்கலாம்; கவித்துவமும் ஞானமும் ஒருவரிடத்தே இணைந்திருத்தலும் கூடும். கவியின் உள்ளம் இலக்ஷியமாகிய ஞான உலகை எட்டவும் செய்யலாம்; ஞானியும் தன் அனுபவத்தையும் கருத்தையும் தக்க சொற்களால் அழகுபெற வெளியிடலாம். ஆயினும், ஞானி ஒரு கவியை எழுதும்போது கருத்தளவாயிருக்கும் இலக்ஷியத்தின் அழகு அனுபவ உண்மையாகவும் அழகாகவும் மாறுகின்றது; ஆனால் சாதாரணக் கவி ஞான விஷயத்தைப்பற்றிப் பேசும்போது ஞான உலகிலே மட்டும் அனுபவிக்கப்படும் இலக்ஷிய அழகு கவியில் வெறுங் கருத்தாகவே அமைகின்றது—அதாவது ஓர் அழகிய இலக்ஷியமாக மட்டும் கருதப்படுகிறது. ஞானியின் கவிக்கும் கவியின் ஞானத்திற்கும் உரிய இயல்புகள் இதனால் விளங்கும்.

ஆண்டாள் நாவுக்கரசர் நம்மாழ்வார் சம்பந்தர் போன்றவரிடத்தில் கவித்வமும் ஞானமும் ஒன்றாய் இணைந்தன. காவியக் கண்ணால் கண்ட அழகை இவர்கள் ஞானக் கண்ணால் உள்ளவாறு நோக்கி இன்புற்றார். கவியெழுதத் தூண்டுகோலாக அமைவது, கவிஞனது நெஞ்சத்தை நிரப்பும் உணர்ச்சி; இவ்வுணர்ச்சியைக் கிளப்புவது அறிவுலகத்திலுள்ள ஒரு கருத்தின் அழகே. ஒரு ஞானியின் நெஞ்சத்து ஊறும் உணர்ச்சியோ நெஞ்சிற்கு அப்பாலுள்ள அனுபூதியுலகிற் கண்ட

மெய்ப்பொருளின் அழகால் எழுப்பப்படுவது. ஆண்டாள் தன்னிடத்து அன்புணர்ச்சி தலையெடுத்த சமயமே நிலையுற்ற பரம்பொருளினிடத்திற் செலுத்தி, உயர்ந்த அன்பாக்கி உயர்ந்த காட்சியை எய்தலானாள். பரம்பொருளாகிய எம்பெருமானது அழகைக் கண்டு மாலாகி, அவனைப் பிரிந்து துடித்த சமயம் பாடிய கவியில் 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லாதவளாய் 'பழுதின்றிப் பார்க்கடல் வண்ணனுக்கே பணி செய்து வாழப்' பெறவேண்டும் என்று நோற்றாள். தொண்டரடிப் பொடியாழ்வார் 'மாதரார் கயற்கண் என்னும் வலையுட்பட்டு அழுந்துவேனைப் போதரே யென்று சொல்லிப் புந்தியுட் புகுந்து தன்பால் ஆதரம் பெருக வைத்த அழகன்' என்று எம்பெருமானைப் பற்றிக் கூறுகின்றார். இப்பாக்களிலே சிற்றின்பத்தைத் துறந்து பேரின்பத்தில் ஈடுபடும் உணர்ச்சி தெற்றெனப் பிறங்குகின்றது. ஆனால் ஒரு கவிஞன் அகத்துறையில் இறைவன்மீது பாடல் பாடினும், பேரின்ப உணர்ச்சி அதிலே உயர்ந்த கருத்தளவாக நிற்பதல்லாது அனுபவமாகாது போகும். ஆண்டாள் மாணிக்கவாசகர் சம்பந்தர் முதலியோர் இறைவனை நாயகனைப் பாவித்துப் பாடிய பாடல்களில் சிற்றின்ப உடையிலே பேரின்பமே திகழ்கின்றது, தெய்வ மணங் கமழ்கின்றது. ஆனால் ஒரு கவிஞன் இறைவனைப் பற்றிப் பாடும் பாடலில் பேரின்ப உடையிலே சூக்குமமான சிற்றின்பமே திகழ்கின்றது; காவிய மணங் கமழ்கின்றது. 'அச்சமில்லை அச்சமில்லை' என்று வீராவேசம் கொண்ட ஒரு கவிஞர் கூறுகின்றார்; அதே மொழிகளை வீராவேசம் பூண்ட ஒரு ஞானியும் கூறுகின்றார். 'இச்சகத்துளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும் அச்சமில்லை' யென்றும் 'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை' யென்றும் பாடுகிறார் கவிஞர்; 'நாம் ஆர்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்'' என்று பாடுகிறார் ஞானி. வீர இலக்ஷியத்தைக் கற்பனையுலகிலே கண்ட கவிஞர் இச்சகத்துளோரெலாம் திரண்டு தம்மை எதிர்த்து நிற்கும் காலமும், உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற காலமும் தமக்கு வரவில்லை என்ற துணிவு நன்கு உள்ளே வேரூன்றப் பெற்றுள்ளனர்; ஒருக்கால் அப்படித் திரண்டு எதிர்த்து நின்றாலும், வானிடிந்து வீழ்ந்தாலும் அச்சமில்லை என்று கூறுகிறார். சிவபரம் பொருளை ஞான உலகில் நேரிற் கண்டு அவனுடைய திருவடிகளை மீளா ஆளாய்க் குறுகின அனுபூதியினின்றும் வீரத்தன்மையை உணர்ந்த ஞானியாராகிய அப்பரோ, மத மாறிய குற்றஞ் சுமத்தி அரசன் தம்மை அழைக்க, அவனுடைய ஏவலாளர் கையில் வில்லும் அம்பும் கம்பும் கழியுமாக முன் னிற்பதனால், அரசனது ஆணைக்கு உயிரை விட்டுத்தான் ஆகவேண்டும் என்ற உறுதியான எண்ணம் வேரூன்றப் பெற்றிருக்கின்றார்; அந்த நிலையிலும் உண்மை ஞானத்தினின்றும் எழுந்த வீர உணர்ச்சியால் 'நாம் ஆர்க்கும் குடியல்லோம், நமனை யஞ்சோம்' என்று பாடுகிறார். அச்சமின்மை என்ற கருத்தின் தரிசனத்தால் எழுந்த வீர உணர்ச்சிப் பெருக்கைக் கவிஞர் பாவில் வெளியிடுகின்றனர்; அச்சமின்மை யென்ற அனுபூதி உண்மையின் தரிசனத்தால் எழுந்த வீர ஆவேச வெள்ளத்தை ஞானி தமது கவியில் வீறுபெற வெளியிடுகின்றனர். ஞான வீரத்தின் வீறு வெள்ளிடை விலங்கலென (மலையென) இலங்குவதைச் சிந்திப்போர் காணலாகும்.

தற்காலத்திலே கவிஞர் எழுதும் ஞானப் பாடல்கள் மிகுதியாக வழங்கி வருகின்றன; இப்பாடல்கள் காவிய அழகு நிரம்பியும் இன்பச்சுவை ததும்பியும் இருக்கின்றன; எனினும், நிலையான ஞான ஊக்கத்தை ஊட்டவேண்டின், இலக்ஷியமாகக் கருதப்படும் ஒரு கருத்தை வெளியிடுவதைவிட உண்மை அனுபூதியை வெளியிடுவது மிகவும் இன்றியமையாதது. ஞானியைக் கவி எழுதும்படித் தூண்டும் உணர்ச்சிக்குக் காரணமான அனுபவம் ஓர் உயர்ந்த பூமியை (ஞான உலகைச்) சார்ந்தது; ஆனால் கவிஞரது நெஞ்சத்தில் உணர்ச்சியைப் பெருக்கிக் கவியெழுதச் செய்யும் அனுபவம் பொதுவாக அதனினும் தாழ்ந்த ஒரு குறிப்பிட்ட பூமியினின்றே எழுகின்றது. இப்பூமி மன உலகமேயன்றி அதற்கு அப்பாலுள்ள ஞான உலகமன்று. மனஉலகிலே உணர்ச்சியும் கருத்தும் தனித்தனியாகப் பிரித்தறியக் கூடிய நிலையிலே அமைந்துள்ளன; கருத்து ஒன்று உள்ளத்தில் உதித்ததும், அதற்கிசைய உணர்ச்சி கவிஞரது உள்ளத்திலே பொங்குகின்றது. ஆனால் அதனினும் உயர்ந்த ஞான உலகிலோ உணர்ச்சியும் கருத்தும் வெவ்வேறாக உணரப்படாது, அவ்விரண்டிற்கும் மூலமான ஒரு அனுபூதியாக மாறுகின்றன; அந்நிலையில் அவை தமக்குரிய சிறப்பியல்புகளை இழந்து ஒன்றாக மருவுகின்றன. இந்நிலையிலே பெறும் உண்மை பிறகு மன உலகிற்குக் கீழிறங்கும்போது ஓர் உயர்ந்த கருத்தாகவும், அதற்கு ஏற்றவாறு நெஞ்சத்துப் பொங்கும் மாண்புற்ற உணர்ச்சியாக

வும் வடிவெடுக்கின்றது. அவ்வுணர்ச்சி கவிஞரிடத்துக் கவிதை வெறியை மூளச் செய்கின்றது; அக்கவிதை வெறி (ஆவேசம்) அவ்வுணர்ச்சியை அழகுமிக்க சொற் சித்திரமாக வெளித்தோன்றச் செய்கிறது. ஒரு சாதாரண மனிதனிடத்தும் கருத்துக் கேற்றபடி உணர்ச்சி எழுமாயினும், கவிதை வெறியின்மையால் பாடலாக அது பரிணமிக்க வழியில்லாது போகும். கருத்தின் மேன்மைக்குத் தக்கவாறு உணர்ச்சி உள்ளத்துப் பொங்குதலே கவிதைக்கு உயிர்நிலையாகும்; கருத்திற்கும் உணர்ச்சிக்கும் உள்ள இசைவு இயற்கையானதாயும் தூயதாயும் இருக்கும் தன்மைக்கு ஏற்பக் கவிதையும் அதன்நயமும், கற்போரது உள்ளத்திலே அதே உணர்ச்சியை ஊட்டும் திறனையும் பெற்று விளங்கும். அனுபூதி உலகமாகிய ஞான உலகினின்றும் கீழிறங்கும் சக்தியால் உள்ளத்தூறும் உணர்ச்சியோடு கவிதை வெறி இணையும் போது தோன்றும் பாடலே உண்மையான அமரகவியாகும்; காரணம் யாதெனின், மன உலகிற்கு அப்பாலான ஞான உலகினில்தான் அமரத்தன்மை ஒளிர்கின்றது, மனவுலகிலன்று. அந்த அமரத்தன்மையின் முத்திரையைப் பெற்ற கவிஞனே அமரகவிஞனாவான்.

இவ்விஷயத்தில் ஒன்று கூர்ந்து கவனிக்கத் தக்கது. கருத்திற்கு இசைந்த உணர்ச்சியின் எழுச்சி ஒருவனது உள்ளத்தில் இயற்கையாக அமையாது, செயற்கை முறையாலும் ஏற்படலாம். கவிதை எழுதும் தூண்டுதல் தன்னிடம் இயல்பாகவோ பழக்கத்தாலோ அமையப் பெற்றவன் ஒருகருத்தைப் பலவந்தமாகத் தனது உணர்ச்சியின்மீது சுமத்தி, உணர்ச்சியைக் கிளப்பிக் கவியெழுதுவான். இவ்வாறு உணர்ச்சிக் கருவியை அத்தூண்டுதலால் கட்டாயப் படுத்திக் கவிதையை உண்டு பண்ணும்போது, அக்கவிதை வெளிப்பகட்டுடையதாகி, போலிக் கவியாகும். அதிலே உணர்ச்சியின் ஜொலிப்பின்மையால், அது கற்போரது உள்ளத்தை ஊக்கும் வலிமையற்றதாகும். கவிதையைத் தூண்டும் கவிஞனது உணர்ச்சி நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து—அவனது ஒழுக்க ஊற்றுகள் உள்ள பிரதேசத்திலிருந்து-எழாதபோது, அது உயிரற்றதாய்ச் சுவையிழந்ததாய் இருக்கும், ஆயினும் கவிஞன் உணர்ச்சியிலுள்ள குறைக்குச் சொற்சித்திர அழகால் ஈடுசெய்வான். இலக்கியச் சுவையும் உயர்ந்த நடையும் வாய்ந்த ஒரு கவியில் இத்தகைய குறை குடிகொண்டுள்ளதா, அக்கவிஞனது உள்ளத்துப் பொங்கிய உணர்ச்சி இயற்கையானதா வலிந்து உண்டாக்கப்பட்டதா என்பதை ஆராய்வார் மிகச் சிலரேயாவார். அத்தகைய குறையால் கற்போரது உள்ளத்து எழுப்பப்படும் உணர்ச்சியும் நிலையானதாய் இயல்பாய் அமையாது போகும்; அவரது ஒழுக்கத்தைத் திருத்தி யமைக்கும் சக்தியும் அதற்கு இராதொழியும். ஞானத்தையும் பகவானையும் பற்றிப் பேசும் கவிஞன் ஒருவன் அவ்விரண்டிலும் உண்மையான நம்பிக்கையுடையவனாயின், அவன் தனது உள்ளத்தில் எழும் உண்மையான உணர்ச்சியைக் கவிதை வாயிலாக வெளியிடுவான்; ஆனால் ஞானத்தைப் பற்றி உயர்வாகப் பேசிவிட்டு, அதை மேலெழுந்தவாரியாகப் பழகிவருவோன் ஞானத்துறையில் பொய்வேடம் புனைபவனாவான்; அதனால் அவன் கவிதைத் துறையிலும் பொய்வேடம் புனைபவனாவான். இக்காரணத்தால் உண்மையான கவிக்கு உயர்ந்த ஒழுக்கமும் அவசியமாவது பெறப்படுகிறது.

இந்நாளையில் பலர் கவிதைக்கும் கவியின் ஒழுக்கத்திற்கும் சம்பந்தம் யாது என்று வினவுகின்றனர்; கவியின் கருத்தைப் பெற்றுப் பயனடைவது தானே குறி என்கின்றனர். சரி, ஆனால் 'பயன்' என்பதன் பொருள் யாது? கவியை வாசிப்போர் தமது அறிவாற் சுவைக்கும் காவிய இன்பம் மட்டுமேதானா? அதற்கு மேற்பட்ட பயன் வேண்டாமா? கவிபாடுதல் ஒரு கலையே. கலையென்பதன் காரணம், அது கருத்தையும் உணர்ச்சியையும் நன்றாக வெளிப்படுத்துகிறது, அன்றேல் குறிப்பாகக் காட்டுகிறது என்பது மட்டுமன்று; வாசிப்போரது ஒழுக்கத்தில் உள்ள இன்ன இயல்பை இன்னவிதமாக அது மாற்றுகின்றது என்பதும் அதில் அடங்கியுள்ளது. கவிதையை வாசிப்பதனால் அக்கவிஞன் வெளியிடும் உணர்ச்சியை அறிவது மட்டும் போதாது; அறியும் போதே அக்கவிஞனது உணர்ச்சி எந்த உன்னத நிலையினின்றும் வழக்கமாக உற்பத்தியாகின்றதோ அந்நிலைக்கு வாசிப்போனது உள்ளத்தை உயர்த்தவும் வேண்டும். சுவாமி விவேகானந்தர் ஆத்மாவைப் பற்றிப் பிரசங்கம் பண்ணும்போது, அதைக் கேட்போர் அதைத் தெள்ளத் தெளிய அறிவுக்கண்ணால் காண்பதோடு நில்லாது, ஞானக் கண்ணாலும் அவ்வுண்மையை ஞான உலகிற் காண்பர்; அதாவது அனுபூதியையும் அச்சமயம் பெறுவர். இது பிரசங்கக் கலையின் பெருமாண்பு. அவரது பிரசங்கம் இன்று அதை வாசிப்போர்க்கும் உள்ளத்தில் ஞான ஊக்கத்தை ஊட்டி ஒழுக்கத்தை உயர்த்தும் தன்மை

வாய்ந்ததாகும். இம்மாதிரியே ஞானக் கவிதையும் வாசிப்போரது உள்ளத்தை உயர்த்த வேண்டும். இத்திறமை, அக்கவிஞன் பின்னுகின்ற அழகிய மொழி வலையினைப் பொறுத்ததன்று; அம்மொழிப் பெருக்கிற்கு ஊற்று உறைகின்ற இடமாகிய அவனது ஒழுக்கமென்னும் குன்றையே பொறுத்ததாகும். இதை நினைவிற் பதித்துக் கொள்வோமாயின், கவிதையை மட்டும் கொண்டு கவிஞனைக் கவனியாது விட்டுவிடுதல் நன்று என்பாரின் கருத்திலுள்ள இழுக்கு புலனாகும்.

தற்காலத்தில் அறிவுத்துறையில் மறுமலர்ச்சியைக் காண்கின்றோம் என்று பெருமிதத்தோடு பேசுவார் பலர். ஆனால் ஒன்றைச் சிந்திப்போம். பண்டையக்கால ஞானியர் அறிவை ஞானத்திற்குப் பணிப்பெண்ணாக்கும் குறைக்கு ஆளாகாதிருந்தனர். அறிவின் உயர்ந்த பணியாவது அறிவிற்கு அப்பாலான ஞான அனுபவ உலகிற்கு நம்மை ஏற்றுதலே யாகும். அப்போதுதான் அறிவு அதற்குரிய முழு சுதந்திரத்தையும் பெற்றுப் பொலிகின்றது, எல்லாக் கட்டுப்பாடுகளினின்றும் விடுபடுகின்றது. தற்காலம் அறிவுத்துறையில் ஈடுபடுவார், காவியரசத்தைச் சுவைப்பார், நெஞ்சத்திலே ஊறும் உணர்ச்சிக்கு மெய்ஞ்ஞான அனுபூதிக்குரிய அதிகாரத்தை மெய்யாக ஊட்ட முயல்வாராக. ஞான இலக்ஷியத்தை மையமாகக் கொண்டே, நம்மவரது பண்பாடு அதைச் சுற்றி இயங்கட்டும்; தற்காலக் கவிதையில் பலவந்தமாகச் செயற்கை முறையில் எழுப்பப்படும் உணர்ச்சியால் விளையும் பொய் வேடம் நீங்கட்டும், மெய்யான அனுபவத்தாலும் உயர்ந்த ஒழுக்கத்தாலும் விளையும் ஞான ஆவேசமே கவிதையினிடத்துக் குடிகொள்ளட்டும். காவியரசத்தைச் சுவைப்பதோடு நில்லாது, எல்லாரசங்கட்கும் களஞ்சியமான இறைவனை உணர்ந்து, ஞான ரசத்தையும் சுவைப்போமாக.

ஸ்ரீ ராமகிருஷ்ணாநந்தரின் பெருமை

இவ்வாண்டு சுவாமிகளின் பிறந்தநாள் விழாப் பொதுக் கூட்டத்தில் ஸ்ரீ M. சுப்பராய ஐயர், B.A.B.L., ஆற்றிய சொற்பொழிவு

(248-ம் பக்கத் தொடர்ச்சி)

சுவாமி ராமகிருஷ்ணானந்தரின் சேவைகளையும், பெருமைகளையும் பல பகுதிகளாகப் பிரிக்கலாம். (1) முதன்முதலாக, அவருடைய குருபக்தியையும், கைங்கர்ய ஸேவையையும் கூறவேண்டும். (2) அவர், தம்போன்ற சுவாமிகளிடத்தில் வைத்திருந்த விசுவாசம் குறிப்பிடத் தக்கது. எல்லா சுவாமிகளின் ஒத்துழைப்பையும் தாராளமாக அவர் பெற்றுக் கொள்ள முடிந்ததால்தான், தற்போதைய மட ஸ்தாபனங்கள் அமைப்பது சாத்தியமாயிற்று.

மூன்றுவதாக, சென்னையிலும், இந்தியாவின் இதர பாகங்களிலும் அமைத்திருக்கும் மடங்களின் பூஜை, அனுஷ்டான முறைகளை அவர் வகுத்தார். அவருடைய சகோதர பக்தர்களிடையே இது பற்றிக் கடுமையான அபிப்பிராய பேதம் இருந்தது. ஆனால் இவருடைய மேன்மையான குணங்களும், விசுவாசத்தின் சிறப்பும், அவர்களுடைய அபிப்பிராயங்களையெல்லாம் மாற்றிக் கொள்ளும்படிச் செய்து விட்டன. அவருடைய கொள்கைகளும் கருத்துக்களும் தாராளமானவையாக இருந்தன. விக்ரஹ ஆராதனையில் அவருக்குப் பெருத்த நம்பிக்கை உண்டு தென்னிந்தியாவில் நாம் எவ்வளவு வைதீகமாக இருக்கிறோமோ அவ்வளவு வைதீகமாக அவரும் இருந்தார்.

நான்காவதாக, ஒரு மதப் பிரசாரகர் என்ற முறையில் அவர் செய்த சேவை மிகப் பெரியது. மிக உண்மையான பக்தர்கள் பலர் இவரை வந்து அடைந்தார்கள். கிளை ஸ்தாபனங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று கோரிக்கைகள் பலவிடங்களிலிருந்து வந்தன.

ஸ்ரீராமகிருஷ்ணாநந்தர் ஒரு உன்னதமான காரியத்திற்காக தானம் கேட்கத் தயங்கியதில்லை. அகம்பாவம் என்பது அவரிடம் அறவே இல்லை என்பதற்கு இது அடையாளமாக இருந்தது.

மேலும், பல இடங்களில் மடத்தின் கிளைகளை அமைத்து, ஆடம்பரம் இல்லாமல் சமூகம், கல்வி, முதலிய எல்லாத் துறைகளிலும் அவர் சேவை செய்தார். பிரசங்கங்கள் செய்வது, பத்திரிகைகள், புத்தகங்கள் அச்சிட்டு வெளியிடுவது ஆகியவைகள் மூலம் அவர் அறிவுத் துறையில் செய்த சேவை மிகப் பெரியதாகும்.

1. குரு பக்தி

ஸ்ரீ ராமகிருஷ்ணாநந்தர் மிகவும் வைதிக குலத்தில் பிறந்தவர். இவருடைய தகப்பனார் ஸ்ரீ ஈச்வர சந்திரர்—பக்தி சிரத்தையுள்ள ஒரு வைதிக பிராம்மணர். சிறு வயதிலிருந்தே சுவாமிகட்கு ஸ்ரீ தேவியிடம் அளவு கடந்த பக்தி உண்டு. அவர் மாமிசம், மீன் முதலியவற்றைச் சாப்பிட மாட்டார். வங்காளத்திலும், ஒரிஸாவிலும் சன்னியாச வாழ்வு நடத்தி வந்த அவருடைய தகப்பனார் தான் அவருடைய வைதிக வாழ்வுக்குக் காரணம். இந்த வைதீக ஆசாரத்தினாலேயே சுவாமிகள் சென்னை வாசிகளின் அபிமானத்துக்குப் பாத்திரமானார் என்று சொல்லலாம். விவேகாநந்தர் இதையும் மனதில் வைத்துக் கொண்டு தான் சென்னைக்கு அனுப்பினார் என்று சொல்லலாம்.

சுவாமிகள் மாணவராக இருந்த காலத்திலேயே அவர்க்கு ஆத்மீக தாகம் உண்டாயிற்று. கல்லூரியில் நல்ல புகழோடு தேர்ச்சி பெறுவார் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள். இக் காலத்தில் சுவாமிகட்குத் தம்முடைய உறவினரான சரத் சந்திரருடனும், பிற்காலத்தில் சுவாமி விவேகாநந்தராக விளங்கின நரேந்திரருடனும் தொடர்பு ஏற்பட்டது. பிரம்ம சமாஜமும், அதன் தலைவரான கேசவ சந்திர சேனருடைய போதனைகளும் இவர்களைக் கவர்ந்தன. அனுஷ்டானத்திலிருந்த மத சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள் ஆகியவைகள் பற்றி அவர்கட்குச் சந்தேகம் பெரிதும் உண்டாயிற்று. இம்மாதிரியான மனப் போக்குடைய பலர் 'பிரம்ம ஞான சபை'யைச் சேர்ந்தது போல அவர்கள் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தார்கள். கேசவ சந்திர சேனர் சுவாமிகளிடம் அபிமானம் கொண்டவர். 1886-ல் பகவான் குருதேவர் காலமாவதற்கு 11 வருஷங்கள் முன்னால், அவருடன் கொண்டிருந்த தொடர்பினால் கேசவ சந்திர சேனர் தம் கொள்கைகள் பலவற்றை மாற்றிக் கொண்டார். விக்கிரக ஆராதனையிலும், கடவுளை மனித உருவோடு பார்ப்பதிலும் அவருக்கு ஒரு நம்பிக்கை பிறந்தது. கேசவர் துர்க்கா பூஜை செய்யத் தொடங்கினார். விக்கிரக வணக்கம் என்பது கடவுளின் தன்மையை ஒரு சின்னத்தின் மூலம் வணங்குவது தான். ஆகையால் அதை அறவே நிராகரிக்க வேண்டுமென்பதில்லை என்பதைக் கேசவர் அறிந்து கொண்டார். அது வரையில் அவருடைய கடவுள் பிரார்த்தனைகள், கிறிஸ்தவக் கோயில்களில் நடக்கும் பிரார்த்தனைகள் மாதிரித்தான் இருந்தன; அதையும் அவர் மாற்றிக் கொண்டார். பிரம்ம சமாஜத்தைச் சார்ந்தவர்கள் இந்து மத தோரணையிலேயே நிஷ்டை, தியானம், ஆகியவைகளைச் செய்யத் தொடங்கினார்கள். சசி, சரத், நரேந்திரர் ஆகியவர்களெல்லாம் பிரம்ம சமாஜத்தின் புதிய கொள்கைகளில் தோய்ந்து இருந்தவர்கள். கேசவர், பரம ஹம்ஸரிடம் பெரும் மரியாதை வைத்திருந்தார் என்று அவர்கள் அறிந்து, 1883-ல் அவரைப் பார்க்கச் சென்றார்கள். முதன் முதலாகவே அவர்களுடைய அறிவையும் உள்ளத்தையும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கவர்ந்து கொண்டார். 1885 வரையில் அவர்கள் தக்ஷிணேசுவரத்துக்குப் போய் வந்துகொண்டிருந்தார்கள். சுவாமி இராமகிருஷ்ணாநந்தர் கணிதம், சமஸ்கிருதம், இங்கிலீஷ் ஆகியவற்றில் நல்ல தேர்ச்சி வாய்ந்தவர். இருந்த போதிலும், ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் அபிமானம் உண்டான பிறகு மேற்கொண்டு படிப்பதில் அவருடைய கவனம் செல்லவே இல்லை. பகவானிடத்தில் அவர் கொண்டிருந்த கவர்ச்சி பிரேமையாக மாறியது. இவர், தம் மனதில் எழுந்த சந்தேகங்களைப் பற்றிக் கேட்பதற்காக ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் செல்வார் என்றும், ஆனால் இவர் வாய் திறந்து கேட்க ஆரம்பிக்கு முன்னர் பரமஹம்ஸரே அவ் விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்து அவர் சந்தேகங்களைத் தீர்த்து விடுவார் என்றும் சுவாமிகள் கூறியிருக்கிறார்.

1885-ம் வருஷத்தின் முடிவில், பகவான் கடுமையாக வியாதிப்பட்டு, காசிப்பூரில் வாடகைக்கு எடுத்துக் கொண்ட ஒரு பங்களாவிலே தங்கிவிட்ட போது, ராமகிருஷ்ணாநந்தரும், அவருடைய இதர சகோதர சிஷ்யர்களும் காசிப்பூரிலேயே தங்கிவிட்டனர். இரவு பகல் என்ற வித்தியாசமின்றி, அல்லும் பகலும் விழித்திருந்து குருஸேவை செய்வதுதான் சுவாமிகளின் வாழ்க்கையில் பிரயோசனமாக அமைந்தது. பரமஹம்ஸர் மறைந்த அன்றைய தினம் விவேகானந்தர் அவருடைய காலைப் பிடித்துக் கொண்டிருந்தாராம். அப்போது பகவான் இந்த இளைஞரின் கூட்டத்தை அவருடைய பொறுப்பில் ஒப்படைத்தார். அது எத்தகைய முக்கியமான நிகழ்ச்சி என்பது பிற்காலத்தில் நடந்த சம்பவங்கள் மூலம் விளங்கியது.

தமது குருவிற்கு சசி மஹராஜ் செய்த மகத்தான சேவைகளின் காரணமாக அவருக்கு ராமகிருஷ்ணானந்தா என்ற பெயரை விவேகாநந்தர் அளித்தார். பகவான் உடல்

துறந்த தினம் முதற்கொண்டு சசி மஹராஜ் அவருடைய திருமேனியின் சேஷத்தைப் பாதுகாக்க ஆரம்பித்தார். பகவானுடைய படம் ஒன்றை, அதை உயிருடன் இருக்கிற பாவனையிலேயே வணங்கத் தொடங்கினர். விவேகானந்தருக்கும் பிரம்மானந்தருக்கும் அது பிடிக்கவில்லை. ஆயினும் சுவாமிகள் 1886-முதல் 1897 வரையில் காசிப்பூரிலும், கல்கத்தாவிற்கு அருகில் அவ்வப்பொழுது மாற்றப்பட்ட இடங்களில் இடைவிடாமல், பகவான் உயிருடன் இருந்தபொழுது அவருக்கு என்னென்ன சேவைகள் செய்தாரோ அந்த சேவைகளையெல்லாம் பக்தியுடன் செய்து வந்தார். 1897-ல் அவர் சென்னைக்கு வந்த பிறகு, 1905 வரையில் Ice Houseஇலும் 1905 லிருந்து 1911 வரையில் மைலாப்பூர் மடத்திலும் அவர் இப்பூஜையைத்தொடர்ந்து நடத்தி வந்தார். குருவினிடத்தில் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தியினால், அவருடைய சகோதர பக்தர்களும், மடத்தைச் சார்ந்த இதர சன்யாசிகளும் செய்ததைப் போல ஸ்தல யாத்திரை போகவேண்டும் என்ற எண்ணம் அவரிடத்தில் உண்டாகவேயில்லை. யாரோ ஒருவர் அவரை நீங்கள் ஏன் தவம் செய்வதில்லை என்று கேட்டதற்கு அவர், "எங்கள் எல்லோருக்கும் சேர்த்து எங்கள் குருமகராஜ் தபஸ் செய்துவிட்டுப் போய்விட்டார். அவருடைய உபதேசங்களைப் பரப்புவதே எங்கள் கடமை" என்று கூறினாராம். ஆயுள் முழுவதிலும் அவர் காசிக்குக் கூடப் போனதில்லை. தொடர்ந்து சேவை செய்வதன் மூலம் அவர் சேவையையே பூஜையாகக் கொண்டு விட்டார்.

2. சகோதர பக்தர்களிடம் அவர் கொண்டிருந்த விசுவாசம்

பகவான் பரமஹம்ஸரிடத்தில் தொடர்பு கொண்டிருந்த பக்தர்கள் அனைவரும் அவருடைய அம்சமே என்று சசிமஹராஜ் நம்பினர். ஆகையால் அவர்களிடத்தில் அவர் கொண்டிருந்த விசுவாசம் பகவானிடத்தில் அவர்கொண்டிருந்த விசுவாசத்தைப் போலவேஇருந்தது. அறிவின் திறமை, சாதனை,பகவானை வந்து சேர்ந்த காலம் ஆகியவற்றால் அவர் விவேகானந்தருக்கும் வேறு சிலருக்கும் சமமானவராக இருந்த போதிலும், முக்கிய ஸ்தானத்தைப் பிறருக்குக் கொடுத்து விட்டு, அவர்களுடைய கட்டளைகளுக்குஇணங்கி அவர் நடந்து கொண்டார்.

அமெரிக்காவுக்கு இரண்டாவது முறையாக சுவாமி விவேகானந்தர் புறப்பட்ட போது ஒரு சம்பவம் நடந்தது. 1897-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் சென்னைக்கு விவேகானந்தர் புறப்பட்டார். கப்பல் சென்னைக் கடற்கரையில் தங்கியது. துறைமுக சம்பந்தமான விதிகளினால் கப்பலிலிருந்து யாரும் இறங்கி வருவதற்கோ, கப்பலுக்குள் யாரும் ஏறிச் செல்வதற்கோ முடியாமல் இருந்தது. ஒரு சிறிய கட்டுமரப் படகிலிருந்து கொண்டு கப்பலிலிருந்த விவேகானந்தருடனும் துரியானந்தருடனும் சம்பாஷித்துவிட்டு, கப்பலைச் சுற்றிப் பிரதக்ஷிணம் வரும்படியாகப் படகுக்காரனை சுவாமிகள் கேட்டுக் கொண்டார். கப்பலில் இருந்த இரு மகான்களுடைய பாதங்களைத் தொட்டுப் பணிவதற்கு விதியில்லாதபடியால் இப்படிச் செய்தார்.

விவேகானந்தர் அமெரிக்காவில் இருந்து திரும்பி 1897-ல் சென்னை வந்து சேர்ந்தார். சென்னையில் பிரதான பிரமுகர்களான ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி ஐயர், ஸ்ரீ P. R. சுந்தரம் ஐயர் ஸ்ரீ M. C. நஞ்சுண்டராவ் ஆகியவர்கள் அவரை, சென்னையில் ஒரு மடத்தை ஸ்தாபிப்பதற்காக அவருடைய சகாக்களில் ஒருவரை அனுப்பும்படியாகக் கேட்டுக் கொண்டார்கள். அப்போது "உங்கள் தென்னிந்தியாவிலேயே யார் அதிக வைதிகமாய் இருக்கிறார்களோ, அவரைவிட அதிக வைதிக ஆசாரமுடைய ஒருவரை நான் அனுப்புகிறேன். ஆனால் கடவுள் தியானத்திலும், லட்சியங்களிலும் பரந்த தன்மையிலும் அவர் ஒப்பற்றவராக இருப்பார்" என்று சுவாமி விவேகானந்தர் சொன்னார். 1897-ல் பிப்ரவரியில் கல்கத்தா போய்ச் சேர்ந்ததும், சென்னையிலுள்ள தம் நண்பர்களுக்குத் தாம் கொடுத்த வாக்குறுதியைப் பற்றிச் சொல்லி, சசிமஹராஜரைச் சென்னைக்குப் போகும்படிக் கேட்டுக்கொண்டார். அவரும் குருவினுடைய கட்டளையாக அதை ஏற்றுக் கொண்டார். தற்பெருமை, அகம்பாவம் என்பவைகளின் அடையாளமே அவர் மனதில் இல்லை. புகழையோ, பெயரையோ அவர் விரும்பவில்லை. குருவின் ஆக்ஞையைச் செய்வதிலேயே அவர் தம் மனதைச் செலுத்தினர்.

இந்த மாதிரியான ஒத்துழைப்பு உணர்ச்சியினால்தான் சுவாமிகட்குப் பலவிடங்களில் கிளைகளோடு கூடிய இவ்வளவு பெரிய ஸ்தாபனத்தை நிலை நிறுத்த முடிந்தது. இதற்கு முன்னால் இருந்த மகான்களினுடைய பெருமையெல்லாம் அவர்களோடு மறைந்து போன மாதிரி ஆகாமல், ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய பெருமை, விவேகானந்தர் மூலமாகவும், அவருடைய

சகாக்கள் மூலமாகவும் என்றும் விளங்கிக் கொண்டிருக்கிறது.

3. கிளைஸ்தாபனங்கள் நிறுவியது

அவருடைய ஒத்துழைப்பு உணர்ச்சியும், சகோதர சன்யாசிகளிடமும், இதர சிஷ்யர்களின் மேலும் அவருக்கு இருந்த அபிமானமும், விசுவாஸமும்தான் பல கிளை ஸ்தாபனங்களை நிறுவ உதவின. 1903-லிருந்து 1909 வரையில் ராமகிருஷ்ணர் செய்து வந்த விடா முயற்சியின் பயனாக பங்களூர் மடமானது 20-1-1909 அன்று சொந்தக் கட்டிடத்தில் ஆரம்பிக்க முடிந்தது. மைசூர் மடம் பின்னால் ஏற்படுத்தப்பட்டது. அவருடைய சொந்த முயற்சி மூலமாகவே 1900-ல் ரங்கூனிலும், 1904-ல் திருவனந்தபுரத்திலும், மசூலிப் பட்டணத்திலும், 1905-ல் புதுக்கோட்டையிலும், ஆலப்பிழையிலும் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம் ஆகிய ஜில்லாக்களில் 6 அல்லது 7 சங்கங்களை அவர் ஆரம்பித்து வைத்தார். ஹிந்து சம்பிரதாயப்படி அன்னதானத்திலும், வித்யாதானத்திலும் அவருக்கு அளவு கடந்த நம்பிக்கை உண்டு. 1905-ல் ராமகிருஷ்ண மாணவரில்லம் ஆரம்பித்ததற்கும், விசேஷ தினங்களில் பெருவாரியான ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதற்கும் இந்த நம்பிக்கையே காரணம்.

4. மடங்களில் பூஜை முறை

விவேகானந்தர், பிரம்மானந்தர் ஆகியவர்களை சுவாமிகள் மகான்களாகவே கருதி வந்தார். அவர்களுக்கு விக்கிரக வணக்கம் போன்ற சடங்குகள் பெரிதும் பிடிக்காதனவாக இருந்த போதிலும், சுவாமிகள் அர்ச்சனை, பிரசாதம் இவைகளுடன் தினசரி பூஜையையும் நடத்திக் கொண்டே வந்தார். சுவாமி விவேகாநந்தரும் சுவாமி பிரம்மாநந்தரும் முதலில் சற்று ஆக்ஷேபித்த போதிலும், கடைசியில் அவர்களும் இதில் பங்கு கொள்ள ஆரம்பித்தார்கள். பிரசாதத்தினுடைய புனிதத் தன்மையிலும், பிரசாதத்தை உண்பவர்கள், பாபங்கள் நீங்கப் பெற்று, பக்தியின் புனிதத்தை அடைவார்கள் என்பதிலும் அவர் பூரண நம்பிக்கை வைத்திருந்தார்.

பக்தியைப் பற்றி சுவாமிகள் செய்த உபந்யாசங்களில், ஸகுண உபாஸனையே மேலான பக்தி மார்க்கம் என்று கூறியிருக்கிறார். ஏனெனில், அவ்வழியில்தான் மனிதனால் கடவுளின் அனந்தமான அன்பை அடைய முடிகிறது. கடவுளின் தன்மை எல்லையற்றது; ஆனால் அதே கடவுளை, ஒரு உருவத்திற்குள் ஆவாஹனம் செய்யும் பொழுது, அவருடைய சக்தி அதிகமாகிறது; ஏனெனில், அவருடைய ஸகுண ரூபம் பாமரர்களுக்கு எளிதில் கிடைக்கக் கூடியதாய் இருப்பதால், அதிகமான பேர்கள் சித்திபெற சாத்தியமாகிறது. கடவுள் பலருக்குப் பல சந்தர்ப்பங்களில் விசுவரூப தர்சனம் கொடுத்திருக்கிறார். பிற மதத்தினர்களால், கடவுளை ஒரு வித உருவம் கொடுத்துப் பாவிக்க இயலாது. ஆனால், சகல சக்தி வாய்ந்த கடவுளினால், தன் மாயா சக்தியின் மூலம், குறிப்பிட்ட ஒரு வடிவத்திலும் இருக்க இயலும் அல்லவா? கடவுளை நாம் விஷ்ணு, சிவன், ராமன், கிருஷ்ணன் என்று வணங்குவதன் மூலம், கடவுளை நம்முடைய அன்பனாகவோ, தலைவனாகவோ பாவித்து, அவருக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து கொடுக்கிறோம். அவரிடம் பயம் நீங்கி, அன்பு பெருகுகிறது. அவருக்குக் கோயில் கட்டி, பூஜை செய்து, அமுதூட்டுகிறோம். அவரிடமிருந்து எனக்கு அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்பதை விட்டு, அன்பின் மிகுதியால் அவருக்கு வேண்டிய வசதிகளை நாம் செய்து கொடுக்கிறோம். இதனால் நாம் கடவுளுக்கு அருகில் நெருங்கிச் செல்லுகிறோம். அவரும் நம் பரிவுக்கு இரங்கி நமக்குக் கடாக்ஷம் அளிக்கிறார்.

நம் நாட்டில் கோயில்கள் கட்டப்பட்டதன் காரணம், மனதை ஒருமுகப் படுத்திக் கொள்வது மட்டுமன்று. கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார், அவருக்கு எப்போதும் சேவை செய்துவிட்டுப் பிறகே நாம் நம் சொந்த சௌகர்யங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும், என்ற எண்ணத்தைப் பரப்புவதே அதன் முக்கிய நோக்கமாகும். பாரத நாட்டில் பிறந்த நாம் இவ்விஷயத்தில் பாக்கியசாலிகளே. கண் மூடிக் கொண்டிருக்கும்போது ஹிருதய பீடத்திலும், கண் விழித்திருக்கையில் ஒவ்வொரு ஜீவராசிகளிலும் கடவுளைக் கண்டு, ஆராதிப்பதற்கு நாம் கற்பிக்கப் பட்டிருக்கிறோமல்லவா? அப்படி நம் லௌகீக கார்யங்களில் ஈடுபட்டு, மறந்து போனாலும், உயர்ந்த கோபுரங்களும், கோயில் மணிகளும் நம்முடைய கடமையைப் பற்றி நமக்கு ஞாபகமூட்ட இருக்கின்றன.

இப்படிப்பட்ட முன்னேக்கத்துடன் சுவாமி விவேகாநந்தர் சுவாமிகளைச் சென்னைக்கு அனுப்பி வைத்தார். ஆலம்பசாரில் மாத்திரம் ஒரே ஒரு மடம் இருந்த காலத்தில்,

சுவாமிஜி 1897-ல், ராமகிருஷ்ண மிஷனை ஆரம்பித்து வைத்தார். ஏகாதசி பஜனை, திதி பூஜைகள், தரித்திர நாராயண ஸேவை ஆகியவையெல்லாம் வெகு சீக்கிரத்தில் தொடங்கின. இன்றைக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ணாநந்தர் ஏற்படுத்தி வைத்த பூஜை முறைதான் எல்லா மடங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அவருடைய வார்த்தைகளின் மூலமும், புன்சிரிப்பின் மூலமும் வெளியான அவருடைய சக்திதான் இவை எல்லாவற்றையும் சாத்தியமாக்குகிறது.

5. மதப் பிரசாரங்கள்

சுவாமிகள் சென்னைக்கு வந்து சேர்ந்த அதே மாதத்திலேயே, கீதை, பாகவதம் இன்னும் பல விஷயங்களைப் பற்றியும் வகுப்புகள் நடத்த ஆரம்பித்துவிட்டார். தற்காலத்திய நவீன அளவுகோலின்படிப் பார்த்தாலும் அவர் ஒரு முதல்தரமான ஆசிரியர் என்றுதான் சொல்ல வேண்டும். வகுப்புக்கு வந்திருக்கிறவர்களுடைய விருப்பத்தையும் சக்தியையும் தெரிந்து கொண்டு, அதற்குத் தகுந்தாற் போலத் தன்னுடைய போதனைகளை அமைத்துக் கொள்வார். ராமகிருஷ்ண மிஷன், மடம் ஆகியவற்றின் தலைவராக இருந்து சில வாரங்களுக்கு முன்னால் காலஞ் சென்ற சுவாமி விரஜாநந்தஜி மஹராஜ் என்பவர்க்குப் பரிக்ஷைக்காகக் கணிதம் கற்றுக் கொடுக்க ராமகிருஷ்ணாநந்தர் முன் வந்தது எனக்கு ஞாபகம் வருகிறது. அவரோ, துறவைப்பற்றியும், சன்னியாசத்தைப் பற்றியும் பேச ஆரம்பித்துவிட்டார். முடிவு என்னவென்றால், பரிட்சை நடந்து போய்விட்டது; காளிகிருஷ்ணர் சன்னியாசியாகி மடத்தில் சேர்ந்து விட்டார். பின்னால் அதனுடைய தலைவராகவும் ஆனார்.

இராமகிருஷ்ணாநந்தர் தட்டுத் தடங்கின்றிப் பேசக்கூடியவர் அல்ல. ஆனால் ஆடம்பரம் இல்லாமல் ஸ்வயமாகவே சிந்திக்கக் கூடிய அவருடைய திறமையும், எவ்வளவு கடினமான விஷயத்தையும் மிக எளிமையாக, அவர் விளக்கிக் காட்டிய முறையும் சிஷ்யர்களை அவர் பக்கம் கவர்ந்தன. திருவல்லிக்கேணி, சிந்தாத்திரிப்பேட்டை, புரசவாக்கம், தங்காசாலைத் தெரு, மைலாப்பூர், சென்னை நகரில் இன்னும் பல இடங்களிலும் எங்கும் அவர் வகுப்பு நடத்தியிருக்கிறார். சென்னைக்கு வெளியில் பல இடங்களிலும், அவர் பல பிரசங்கங்கள் செய்திருக்கிறார்.

6. யாசகம் செய்தது

1886-லிருந்து 1897-வரை அவர் காசிப்பூரிலும், ஆலம்பஜாரிலும் இருந்தபோதும் பிற்பாடு ஐஸ்ஹௌஸிலும், மைலாப்பூரிலும், பங்களூரிலும் மடங்களை ஸ்தாபிப்பதற்காகவும் மிகக் குறைந்த செலவுகளுக்காகவும், வெகு சாதாரணமான சாப்பாட்டுக்காகவும் அவர் கவலைப்பட வேண்டியிருந்தது. யாசிக்கும் கலையில் சசி கைதேர்ந்தவர். அவருக்கு மனச் சாந்தி யளிப்பது மதம்தான். அதற்காக யாசிக்க வேண்டியிருந்தால் அவர் பின் வாங்குவதில்லை. பலமுறைகள் போய்க் கேட்ட பிறகும் ஒருவர் கொடுக்காவிட்டால் அவர் வருத்தப்படமாட்டார். "நம் கடமையை நாம் செய்து விட்டோம்" என்று அமைதியாகச் சொல்லுவார். இம்மாதிரி சமயங்களில் அவருடன் சென்றிருந்த பக்தர்களில் யாருக்காயினும் கோபம் வருமாயின் ராமகிருஷ்ணாநந்தர் "அவர் மேல் நாம் வருத்தப்படக் கூடாது. ஏனெனில், அதனால் அவருக்குத் துன்பம் நேரலாம். நமக்கு நன்கொடை அளிக்க அவருக்கு விருப்பமில்லை என்பதற்காக நாம் அவரைப்பற்றிக் குறைவாக நினைக்கக் கூடாது" என்று கூறி அவர்களை அடக்கிவிடுவார்; சுருங்கக்கூறின் ஸ்ரீ சுவாமி ராமகிருஷ்ணாநந்தரது சேவையே தென்னிந்திய ராமகிருஷ்ண இயக்கத்திற்கு அடிப்படையாயும் உயிராயும் ஊற்றாயும் அமைந்தது என்னலாம்.

கிருஷ்ண பகவான் ஸ்ரீமத் பாகவதப் பிரதிபாத்யன்

திருமழிசை ஆஸூரி கிருஷ்ணமாசார்ய, M.A., B.L.

[மயிலை ராமகிருஷ்ண மடத்தில் ஜயந்தி சம்பந்தமாகப் பொதுக்கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்]

இக்கலியுகத்தில் திராவிட தேசம் பக்திக்கு விளை நிலமாயிருப்பினும், தற்காலத்தில் இங்கு பக்தி க்ஷீணமடைந்ததற்குப் பல காரணங்கள் உள. அவைகளில் முக்கியமானது ஜனங்கள் ஸ்ரீமத் பாகவதத்தை அனுதரவு செய்ததேயாம். பாத்மபுராணத்தில், பக்தி என்னும் பெண்மணி திராவிட தேசத்தில் பிறந்து, கர்னாடக தேசத்தில் வளர்ந்து, மஹாராஷ்டிர தேசத்தில் சிற்சில இடங்களில் வாசம்

செய்து, குர்ஜர தேசத்தில் கிழத்தனம் அடைந்து அங்கிருந்து துரத்தப்பட்டு பிருந்தாவனமாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானது லீலா அரங்கத்தின் ஸ்தல விசேஷத்தால் புது யௌவன மடைந்ததாகக் காணப்படுகிறது. இவ்விஷயத்தில் ஸ்ரீரங்கமும் மனதிற்கு சந்தோஷத்தை அளிக்கச் சக்தியற்றது என்று அதே புராணத்தில் நாரதஸ்வாமி வாக்கினால் அறிகிறோம். இத்தேசத்தில் இந்த சாஸ்திரம் கவனிக்கப் படாமைக்குக் காரணம் என்னவென்றால் ஸ்ரீமத் பாகவதத்தின் கதா நாயகர் யார் என்பதை அறியாமையே. ஸ்ரீ ராமாயணத்தால் விளக்கப்படும் பெருமான் ராமசந்திரமூர்த்தியென்றும், சுருதியால் விளக்கப்படும் பெருமான் மஹாவிஷ்ணு என்றும் நிச்சயப்படுத்தியிருக்கிறது போல் ஸ்ரீமத் பாகவதத்தாற் கூறப்படும் பரம்பொருள் (பிரதிபாத்யன்) கிருஷ்ண பகவான் என்று தென்னாட்டினர் மனதில் திட நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனால் பெயரளவு மட்டுமுள்ள பாகவதர்களையும் ஸ்ரீ வைஷ்ணவர்களையும் இப்பிரதேசத்தில் காணுவது போல் வட நாட்டில் காண்பதில்லை. எந்த பாகவதம் பக்தி ஒன்றையே பாகவத இலக்ஷணமாகச் சொல்லி, ஜாதி, குலம், தவம், தானம் இவைகள் பாகவத தரும விஷயத்தில் பொருத்தமற்றவை என்று முறையிடுகிறதோ அந்த பாகவதத்தின் பெயரையே பற்றுக்கோடாகக் கொண்டு ஒரு ஜாதியினரை பாகவதர்கள், வைஷ்ணவர்கள் என்கிற கோஷ்டியிலிருந்து விலக்குவது இக்கலியுகத்தின் பல விபரீத தருமங்களில் ஒன்று; இச்சந்தர்ப்பத்தில் மஹாபாரதத்தில் காணப்படும் ஒரு மந்திரத்தைமாத்திரம் இவர்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

"நமோ ப்ரம்ஹண்ய தேவாய கோப்ராம்
ஹண ஹிதாயச
ஜகத்திதாய க்ருஷ்ணாய கோவிந்தாய
நமோ நம:"

ஸ்ரீமத் பாகவத ப்ரமாணம்: தசமஸ்கந்தம்

ஸ்ரீமத் பாகவதத்தின் பன்னிரண்டு ஸ்கந்தங்களும் கிருஷ்ணனே பகவான் என்பதையும், அந்தக் கண்ணபிரானே ஜலத்தையும் இதர தத்துவங்களையும் வெளிப்படுத்தி, ஜலசாயியான நாராயண மூர்த்தியை ஏற்றுக் கொண்டு குணவதாரங்களால் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் இவைகளை நடத்துகிறார் என்பதையும் தெளிவாக்குகின்றன. இப்படியிருக்க கண்ணனுடைய மூர்த்தியும் நாமமும் துவாபரயுகக் கடைசியில் தேவகீ அம்மையாருடைய கர்ப்பத்திலிருந்து பிறந்து, நூற்றிருபத்தைந்து வருடங்கள் வாழ்ந்து பிறகு மரித்ததாக நினைப்பது பேதமைத்தனமே. மேலும், இந்த அப்பிராகிருத (பிரகிருதிக்கு அப்பாற்பட்ட (பொருளாலான) திருமேனிக்குக் கால ரீதியில் ஓர் ஆரம்பமும் முடிவும் உண்டு என்று நினைப்பது மேலான பேதமைத்தனம். இப்படி நினைக்கும் பேதைகளுக்கே சுகப்பிரம்ம சுவாமி தசமஸ்கந்த முடிவில்

"ஜயதி ஜநநிவாஸோ தேவகீ ஜன்ம
வாதோ" (X. 90 : 52)

என்கிறதினால் மேல்குறித்த அபிப்பிராயத்தை மறுக்கிறார். தேவகீ கர்ப்பத்தில் ஜனித்தவர் என்பது வாதமாத்திரம் அல்லது பேச்சு மாத்திரமே அன்றி உண்மை அன்று என்று நிலைப்படுத்துகிறார். எப்படி சூரியன் கிழக்கில் உதிக்கிறான், உச்சிக்கு வந்தான், மலைவாயில் விழுந்தான் என்பவை வார்த்தை மாத்திரமேயன்றி உண்மையல்லவோ அதுபோல. மேலும் நவமஸ்கந்த கடைசி அத்யாயத்திலிருக்கும் கிருஷ்ண சரித்திர சுருக்கத்தில் "அஷ்டமஸ்து தயோராஸீத் ஸ்வயமேவ ஹரி: கில" (IX 24 : 54) என்பதினால் கிருஷ்ண பகவானுக்குக் கர்ப்பவாஸம் இல்லையென்பதும் அவர் ஸாக்ஷாத் ஹரியேயென்பதும் கிடைக்கின்றன. தசமஸ்கந்தத்தை மாத்திரம் உபன்யஸிக்கும் வகுப்பினர் இவ்விரண்டு சுலோகங்களையும் கவனிக்க வேண்டியது. ஏதோ வேறொரு ரூபமுள்ள வஸ்துவோ, ரூபமில்லா வஸ்துவோ தாற்காலிகமாகக் கிருஷ்ண ரூபத்தையும் நாமத்தையும் (அவை திவ்யமோ பிராக்ருதமோ) ஏற்றுக் கொண்டதென்றும், அக்கிருஷ்ண சரித்திரப் பிரவசனத்திற்கு மாத்திரம் ஸ்ரீ பாகவதம் ஏற்படவில்லையென்றும், அச்சரித்திரம் தசமஸ்கந்தத்தில் தான் இருக்கிறது என்றும் சிலர் கூறுகின்றனர். இவர்கள் போற்றும் தசமஸ்கந்தத்திலேயே நந்தன் முதலானோர் வைகுண்டக் காட்சிப் பேறு அடையும் சந்தர்ப்பத்தில்

"நந்தாதயஸ்து தம் த்ருஷ்ட்வா பரமா
னந்த நிர்வ்ருதா:
க்ருஷ்ணம் சதத்ரச் சந்தோபி: ஸ்தூயமா
னம் ஸுவிஸ்மிதா: (X 28 : 27.

என்ற சுலோகம் காணப்படுகிறது. இதன் பொருள் என்னவென்றால், எந்தக் கிருஷ்ணன் தங்களையெல்லாம் பிரம்ம ஹ்ருதம் என்கிற யமுனைத் துறையில் மூழ்கச் செய்து தமஸுக்கும் பரமாயிருக்கும் வைகுண்ட லோக தர்சனம் செய்து வைத்தாரோ அந்த கிருஷ்ணனையே வைகுண்டத்திற்கு நாதனாகவும் சுருதிகளால் துதிக்கப்பட்டவராயும் நந்

தாதிகள் கண்டு ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் அடைந்தார்கள் என்பது. அவர்கள் அவ்வைகுண்டத்தில் கிருஷ்ண ரூபத்தைத் தாற்காலிகமாக ஏற்றுக்கொண்ட வேருெரு மூர்த்தியை வைகுண்ட நாதனுகக் காணவில்லை. இப்படி தசமஸ்கந்தத்தின் தொடக்கத்திலும் முடிவிலும், கிருஷ்ணனே ஸ்வயம் பகவானுகக் கூறப்பட்டிருப்பதால் சாஸ்திர விசாரண நியாயத்தின்படி தசமஸ்கந்தத்திலும் கிருஷ்ணனே அவதாரி (அவதரிப்பவன்) என்பது விளங்குகிறது.

ஸ்ரீமத் பாகவத ப்ரமாணம்: இதர ஸ்கந்தங்கள்

ஸ்ரீமத் பாகவதத்தின் ஆரம்பத்தில் ஸூத புராணிகர் செளநகாதிகளுக்குச் செய்த உபதேசத்தைக் கவனிப்போம். இம்முனி சிரேஷ்டர் புராணிகரை ஆறு விஷயங்களில் உபதேசம் வேண்டினர். அவையாவன: அகில சாஸ்திரங்களின் ஸாரம்; கிருஷ்ணனது செயல்; சிருஷ்டி முதலான லீலைகள்; அவதார கதைகள்; கிருஷ்ண விருத்தயங்கள், கிருஷ்ணன் என்னும் சூர்யன் அஸ்தமனமாய் விட்டபிறகு தருமம் தன் ரக்ஷணத்திற்கு எதைச் சரணம் அடைந்தது. ஸூத புராணிகர் பதிலின் ஆரம்பத்தில்:

'' முனய: ஸாது ப்ருஷ்டோஹம் பவத்பிர் லோகமங்களம் |

யக்த்ருத: க்ருஷ்ண ஸம்ப்ரச்னே யேனுத்மா ஸுப்ரஸீத்தி || (I 2 : 5)

கிருஷ்ணனைத் தாற்காலிக அவதாரமாக நோக்கின் மூன்று கேள்விகள் கிருஷ்ணனைப் பற்றியதாக இருக்க ஸூத புராணிகரோ அகில சாஸ்திர ஸாரம், சிருஷ்ட்யாதி லீலைகள் அவதார கதைகள் இவைகளெல்லாம் கிருஷ்ணனைச் சார்ந்தவைகளே என்று தெளிவாக உரைக்கிறார். சுவாமியினுடைய '' பாவார்த்தத்திலும் '' இந்த சுலோகத்திற்கு 'சகல சாஸ்திரங்களும் கிருஷ்ணனிடத்திலேயே உயர்ந்த முடிவை அடைகின்றன' என்று பொருள் செய்திருக்கிறார். இதே ஸ்கந்தத்தில் மூன்ருவது அத்யாயத்தில் சிருஷ்டிக்க ஸங்கல்பங் கொண்ட பகவான் பிரகிருதி தத்வங்களாகிய மகதாதிகளையும், குணங்களையும், அவைகளின் காரியங்களாகிய பதினுறு கலைகளையும் ஏற்றுக் கொண்டு, ஜலசாயி நாராயண உருவம் தரித்து புருஷாவதாரமெடுத்தார் என்று சொல்லப்படுகிறது.

'' ஜக்ருஹே பெளருஷம் ரூபம் பகவான் மஹதாதிபி: |

ஸம்பூதம் ஷோடசகல மாதெள லோக ஸிஸ்ருக்ஷயா || (I. 3. 1.)

இந்த புருஷாவதாரமே மத்ஸ்யாதி அவதாரங்களுக்கும் ஜீவராசிகளுக்கும் ஜட பிரபஞ்சத்திற்கும் விதை.

' யஸ்யாம்பஸி சயாநஸ்ய யோகநித்ராம் விதன்வத: |

நாபிஹ்ருதாம் புஜாதாஸீத் பிரம்மா விச்வஸ்ருஜாம் பதி: || (I. 3. 2.)

' ஏதந்நானுவதாராணும் நிதானம் பீஜமவ்யயம்

யஸ்யாம் சாம்சேன ஸ்ருஜ்யந்தே தேவதிர்யக்நராதய:' (I. 3. 5)

ஆனல் இதர அவதாரங்களெல்லாம் புருஷனுடைய அம்சமாவும் கலைகளாயும் அம்சாம்சமாயும் ஆவேசமாயுமிருக்க, கிருஷ்ணுவதாரமோ எந்த பகவான் ஜலசாயியாகிய புருஷாவதாரத்தை எடுத்தாரோ அந்த ஸ்வயமான பகவானே என்று திடமாகக் காணப்படுகிறது.

'' ஏதே சாம்சகலா: பும்ஸ: க்ருஷ்ணஸ்து பகவான் ஸ்வயம் '' (I. 3. 28). இந்த ஸ்ரீமத் பாகவத மஹாவாக்யம் மிகத்தெளிவாயிருக்கிறது. இதையேதான் தசமஸ்கந்தத்திலும் ''எவருடைய அம்சம் புருஷனே, அந்த புருஷனுடைய அம்சம் மாயையோ, மாயையினுடைய அம்சம் குணமோ, அந்த குணத்தின் பரமாணு மாத்திர அற்பத்தால் இப்பிரபஞ்சம் சிருஷ்டிக்கப்படுகிறதோ அந்தக் கிருஷ்ண பகவானை நான் இப்பொழுது சரணம் அடைகிறேன்'' (X. 85 : 30) என்று தேவகி பிராட்டி க்ருஷ்ணனைப் பார்த்துச் சொல்லுகிருர்.

ஆப்த வசனம்

சுருதி ஞானம், அதைத் தழுவிய அனுபவ விஞ்ஞானம் இவைகள் நிறைந்த மஹான்களின் வாக்கு வேதப் பிரமாணத்திற்கு ஈடே என்று சொல்லலாம். இத்தகைய பெரியோர் வசனங்களை இங்குக் கவனிப்போம். முதன்மையாக பிரம்மா கன்றுக்குட்டிகளை அபகரித்த சந்தர்ப்பத்தில் தெளிவாக உரைக்கிருர்.

'' நாராயணஸ்த்வம் நஹி ஸர்வதேஹிநாம்
ஆத்மாஸ்ய தீசோ' கில லோக ஸாக்ஷீ
நாராயணேங்கம் நரபூஜலாய நாத்
தச்சாபி ஸத்யம் நதைவ மாயயா ''
(X. 14 : 14)

'ஹே கிருஷ்ண! நாராயணன் உன் அங்கம்' சுவாமியினது விரிவுரையில் 'அங்கம்' என்கிற பதத்திற்கு 'மூர்த்தி' என்று பொருள் படுத்தியிருக்கிருர். அதன் விளக்கம்: '' ஏ கிருஷ்ணு! நாராயணன் தாங்கள் ஏற்றுக்

கொண்ட மூர்த்தி (வடிவம்). 'அங்கம்' என்கிற சொல்லிற்குப் பதப்பொருள் கொண்டால் கிருஷ்ண பரத்வம் இன்னும் அதிகமாகவே விளங்குகிறது.

தவிர யோகாதேசம் அல்லது ருத்ர கீதையில் பரமேசுவரன் உரைப்பது :

"நமஸ்த ஆசிஷாமீச: மனவே காரணாத்மனே!
நமோ தர்மாய மஹதே க்ருஷ்ணாய குண்டமேதஸே (IV. 24 : 42)

என்கிற மந்திரத்திற்கு வியாக்யானம் செய்கையில் வீரராகவ சுவாமி கிருஷ்ண பகவான் ஸித்த தர்மமென்றுரைத்து அடியில் கண்ட பாரத சுலோகத்தைக் காட்டியிருக்கிறார்.

"யேச வேதவிதோ விப்ரா யேசாத்யாத்ம விதோ ஜனா:
தே வதந்தி மஹாத்மானம் க்ருஷ்ணம் தர்ம ஸனாதநம்

கிருஷ்ணன் ஸநாதன தருமம். தாற்காலிகத் தோற்றமன்று. மேலும் யாதவர்களுக்கு ஆசார்யரும் பிராம்மண சிரேஷ்டமாகிய கர்க்காசார்யர் சொல்லுகிறார் "ஹே நந்தகோபரே! யுகந்தோறும் நானாவிதமான அவதாரங்களைப் பிரகாசப் படுத்துகிறவர் இதோ காணப்படுகிற இந்த கிருஷ்ணனே தான்".

"ஆஸந் வர்ணாஸ்த்ரயோ ஹ்யஸ்ய க்ருஹ்ணதோ நுயுகம்தநூ:
சுக்லோ ரக்தஸ் ததாபீத இதாநீம் க்ருஷ்ணதாம் கத:

"அஸ்ய" என்பதற்கு 'இதோ கிருஷ்ணத்வத்தோடு காணப்படுகிற இவர்' என்றும், 'இதா நீம்' = 'ஸாக்ஷாத் இந்த அவதார சமயத்தில்', 'க்ருஷ்ணதாம் கத: = கிருஷ்ணனாக இருக்கும் தன்மையாகிய இதிலேயே அந்தர்பாவத்தை அடைந்தார்' என்றும் ஜீவ கோஸ்வாமியினுடைய வியாக்யானம். மேலும் கர்க்காசாரியரே "இவருடையவை தான் எல்லா அவதார ரூபங்களும்" என்று தெளிவாக இதே சந்தர்ப்பத்தில் சொல்லியிருக்கிறார். ("பஹூனி ஸந்தி நாமாணி ரூபாணி ச ஸுதஸ்யதே")

தமிழ் நாட்டினருக்குப் பிரபந்தம் அல்லது ஆழ்வார் வாக்குகள் வேதங்களுக்குச் சமமான பிரமாணங்களே. அதிலும் இதர ஆழ்வார்களுக்குச் சீரியாக விளங்கும் நம்மாழ்வாரின் 'திருவாய்மொழி' மிகவும் பெருமை வாய்ந்தது. அதில் ஐந்தாம் பத்தில் "கையார் சக்கரம்" என்கிற முதல் திருவாய்மொழியில் பத்தாவது பாசுரத்தில்

"மீனாயாமையுமாய் நரசிங்கமுகமாய்க் குறளாய்க்
காணாரேனமுமாய் கற்கி யாமின்னங்கார் வண்ணனே"

என்று உரைத்து 'கார் வண்ணன்' என்கிற பதத்திற்கு வ்யாக்யான கர்த்தாக்கள் இதர மூர்த்தியைக் குறிப்பார்கள் என்று பயந்து, ஆழ்வாரே பதினோராவது பாசுரத்தில்,

"கார்வண்ணன் கண்ணபிரான் கமலத் தடங் கண்ணன் தன்னை" என்று பாகவத மஹாவாக்யத்தையே நிலைநாட்டியிருக்கிறார்.

ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஸேனவம்சத்து ராஜாக்களின் ஆஸ்தான கவியாக விளங்கின பரமபக்த சிரோமணியாகிய ஜயதேவ ஸ்வாமி தமது உலகப் பிரசித்தமான 'கீத கோவிந்தத்'தில் கிருஷ்ண பகவானே அவதாரி என்றும் தசாவதாரங்களும் அவர் எடுத்த ரூபங்களென்றும் நிச்சயம் பண்ணியிருக்கிறார் :

"வேதானுத்தரதே, ஜகந்நிவஹதே,
பூகோளமுத்பிப்ரதே
தைத் யாந்தாரயதே, பலிம் சலயதே
க்ஷத்ரக்ஷயம் குர்வதே
பௌலஸ்த்யம் ஜயதே, ஹலம் கலயதே
காருண்ய மாதந்வதே
ம்லேச்சாந் மூர்ச்சயதே தசாக்ருதி க்ருதே
க்ருஷ்ணாய துப்யம் நம :

இதையே இவர் காலத்திற்குப்பின் தோன்றின வல்லபாசார்யரும் நிம்பார்க்கரும், ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய சுவாமியும் உறுதிப்படுத்தியிருக்கிறார்; மத்வாசார்யரையும் இந்த கோஷ்டியில் சேர்த்துக்கொள்ளலாம். அதிக விரிவுக்கு பயந்து இவர்கள் கொள்கை இங்கு சொல்லப்படவில்லை.

இதர க்ரந்தங்கள்

பிரமாணங்களின் தலை ஸ்ரீபாகவதமே என்னும் திட நம்பிக்கையுள்ள உண்மையான பாகவதர்களுக்கு இவ்விஷயத்தில் இதர பிரமாணங்களின் அவசியமேயில்லை. சாதாரணமாக எல்லோராலும் சுருதிகள் மேலான பிரமாணமாக ஒப்புக் கொள்ளப்படுகின்றன. அந்த சுருதிகளும் பகவான் எப்பொழுது பிரகிருதியைக் கொண்டு சிருஷ்டிக்க ஆரம்பிக்கிறாரோ அப்பொழுதுதான் தங்களுக்கு அவர் அறியப்படுகிறார் என்று முறையிடுகின்றன.

"க்வசிதஜயாத்மனாச சரதோனு சரேந் நிகம:" (X 87 ; 15)

ஸ்ரீமத் பாகவதமோ பகவானாலேயே பிரம்மாவிற்கு வெளியிடப்பட்டது.

"இதம் பாகவதம் பூர்வம் ப்ரம்ஹணே
நாபிபங்கஜே ஸ்திதாய பவபீதாய
காருண் யாத் ஸம்ப்ரதர்சிதம்"

இதுவே ஸூத புராணிகரால்.

"ச்ருதமப்யௌப நிஷதம் தூரேஹரி
கதாம்ருதம்! யந்நஸந்தி த்ருவச்சித்த
ப்ரேமாச்ரு புளகோத்தமா : ||

(I. 2 : 9) என்று ஆரம்பத்தில் சொல்லப்படுகிறது,

ஆனால் இப்பகுதி பாகவதர்களுக்கும் இதரர்களுக்கும் என எழுதத் தொடங்கினதால், இதர நூல்களின் பிரமாணங்களையும் கவனிக்க நேரிடுகிறது.

துவாபர யுகத்தில்தான் க்ருஷ்ண சரித்திர ஆரம்பம்; அந்த அவதாரமும் தாற்காலிகம் என்று சொல்லுபவர் ஸ்ரீராமாயணத்தில் யுத்தகாண்டத்தில் பிரம்மாவினுடைய துதியைக் கவனிக்க வேண்டியது. அதில் "ஹே ராம! நீ க்ருஷ்ணன்" என்று கண்டிருக்கிறது. பிரம்மாண்ட புராணத்திலிருக்கும் கிருஷ்ணாஷ்டோத்தர சத நாமாவளியில் சுகவாகம்ருதாப்தீந்து என்கிற திவ்ய நாமாவினால் கிருஷ்ணன் பாகவதத்தின் இரண்டாவது ஸ்கந்தமுதல் பன்னிரெண்டாவது ஸகந்தம் ஐந்தாவது அத்யாயமுடிய உள்ள சுகப்பிரம்மத்தின் வாக்காகிய அமிருத சாகரத்தின் சந்திரன் என்று அர்த்தம் கிடைக்கிறதே தவிர, 'சுகவாகம்ருதாப்தி' என்பது தசமஸ்கந்தந்தான் என்று நினைப்பது பொருந்தாது. அதுவுமன்றி ஸ்காந்த புராணத்தில், நவவித பக்தியில் ஒவ்வொன்றை அநுஷ்டித்த பிரஹ்லாத ஸ்வாமி, இலக்ஷ்மி பிராட்டி, பிருது மன்னர், பலிச்சக்கிரவர்த்தி ஆஞ்ஜனேய சுவாமி இவர்களெல்லாம் "க்ருஷ்ணப்திரேஷாம் பரம்" என்கிறபடியே கிருஷ்ணனையே பரம புருஷார்த்தமாக அடைந்தார்கள் என்றிருக்கிறது. பாத்ம புராணத்திலோ.

"நாம்னும் முக்யதமம் நாம க்ருஷ்ணாக்யம்மே பரந்தப" என்று பகவானே அருளிச் செய்திருக்கிறார். பிரம்மாண்ட புராணத்திலும்.

'ஸஹஸ்ர நாம்னும் புண்யானும் த்ரிராவ்ருத்யாதுயத் பலம் ஏகாவ்ருத்யாது க்ருஷ்ணஸ்ய நாமைகம் தத்ப்ரயச்சதி' என்று கிருஷ்ண நாமாவின் மேன்மை வெளியிடப்படுகிறது.

அனுமானப் பிரமாணம்

இதுவரையில் வேதப் பிரமாணமும் ஆப்த வசனங்களும் கவனிக்கப்பட்டன. ஐந்தாவது வேதமாகிய புராண இதிஹாஸங்களும் பார்த்தோம். இப்பொழுது அனுமானப் பிரமாணத்தைக் கவனிப்போம். ஸ்ரீதராசாரிய சுவாமி கீழ்க்கண்ட பாகவத சுலோகத்திற்கு டீகா எழுதுகையில் க்ருஷ்ணனுடைய மூர்த்தியே (வடிவமே) அகில லோகங்களுக்கும் ஆதாரம் என்று உறுதிப்படுத்தியிருக்கிறார் :

"லோகாபிராமாம் ஸ்வதநும் தாரணாத்
யான மங்களம்
யோகதாரண யாக்னேய அதக்த்வா
தாமாவிசத்ஸ்வகம்"

(XI. 31 : 6) மேலும் த்யானத்திற்கு பலப்ராப்தியான அந்தக் கிருஷ்ணமூர்த்தியே எந்தக் காலத்திலாவது இல்லாமல் போனால் தியானமே விஷயமற்றதாக ஆவதுமில்லாமல் வ்யர்த்தமாயும் ஆய்விடுகிறது என்று சுவாமியின் அபிப்பிராயம்.

தவிர, எல்லாவித பக்தி பாவனைகளாலும் அடையப்படுவனயிருப்பதே பகவானுடைய பூரணத்துவத்திற்கு இலக்ஷணம். பிரீதிக்கு அன்னியமாயிருக்கும் பாவனைகளெல்லாம் பக்தியைத்தரமாட்டா. கம்ஸாதிகள் போலப் பயத்தாலும், சிசுபாலாதிகள் போலத் துவேஷத்தாலும் எப்பொழுதும் கிருஷ்ணனை ஸ்மரித்துக் கொண்டிருந்தவர் ஸத்வ, ரஜஸ் தமோ குணங்களைக் கடந்தார்கள் என்று சாஸ்திரமூலமாக அறியப்படுகிறதே தவிர, பகவதனுபவம் அவர்களுக்குக் கிட்டிற்று என்பது கிடையாது. பிரீதிபாவங்கள் ஐந்து உள. ஸனகாதிகளுக்குள்ள சாந்தபாவனை; ஹனுமானுடைய தாஸ்ய பாவனை; அருச்சுனன் உத்தவாதிகளுக்குள்ள ஸக்ய ரஸம்; தேவகி யசோதா இவர்களுடைய வாத்ஸல்ய ரஸம்; கோபிகளுக்குள்ள மாதுர்ய ரஸம். எப்படி ப்ருதிவீ தத்வத்தில் இதர நான்கு தத்வங்களும் காணப்படுகின்றனவோ, அதே மாதிரி முதல் நான்கு ரஸங்களும் மாதுர்ய ரஸத்தில் அடங்கியிருக்கின்றன. ஆகையால் மாதுர்ய ரஸமே, பூரண ரஸம் இந்தப் பூரண ரஸத்திற்கு விஷயமாகிய கிருஷ்ணனே பரிபூரண வஸ்து. நாராயண மூர்த்தியையாவது, விஷ்ணுவையாவது மாதுர்ய ரஸத்தோடு அணுகமுடியாது. இதற்குக் கோபிகளே, உத்தவருக்குமாத்திரம் அன்று, மற்ற ஸகல பக்தர்களுக்கும் பரமாசார்யாள். அவர்களின் உபதேசம் கீழ்க்கண்ட ச்லோகம் :

''காஸ்தரயங்கதே கலபதாம்ருத வேணுகீத
ஸம்மோஹிதார்ய சரிதான்ன சலேத்
த்ரிலோக்யாம்
த்ரைலோக்ய ஸௌபகமிதம்சநிரீக்ஷ்ய ரூபம்
யத் கோத்விஜ த்ரும ம்ருகா : புளகான்ய
பிப்ரன்'' (X. 29 : 40)

இப்படி பரிபூர்ணனை கிருஷ்ணனுல்தான் நமது ஸர்வ பாவனரசங்களும் அபஹரிக்கப் படமுடியும். இதர மூர்த்திகளோ இவ்விஷயத்தில் ஓர் அம்சம்: பூர்ணராகார். ஆகையால் பிருஹத் கௌதமீயத்தில்.

''அதவா கர்ஷயத் ஸர்வம் ஜகத் ஸ்தாவர ஜங்கமம் காலரூபேண பகவாம் ஸ்தேனயம் க்ருஷ்ண உச்யதே'' என்று காணப்படுகிறது.

பொதுமக்கள் அபிப்ராயம்

இதுவும் இதர ப்ரமாணங்களை விரோதிக்காவிட்டால் உபயோகமானதே. நம் நாட்டில் ''ஜயந்தி'' என்கிற பதப்பிரயோகம் க்ருஷ்ணன் பூலோகத்தில் தோன்றின நாளைக் குறிக்குமே தவிர இதரர் பிறந்த நாளைச் சொல்லாது. அப்படி இதரர் விஷயம் இப் பதப்ரயோகம் செய்ய வேண்டுமானல் ''நரசிம்ம ஜயந்தி'' 'வாமன ஜயந்தி' என்று சேர்த்துச் சொல்லவேண்டுமே தவிர 'ஜயந்தி' என்கிற தனிப்பதப் பிரயோகம் கிருஷ்ணரது பிறந்த நாளையே குறிக்கும். இதே மாதிரிதான் 'கீதை' என்கிற பதமும் இதன் தனிப் பிரயோகத்துக்குக் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு உபதேசித்த சாஸ்திரமே பொருள்: அன்னிய உபதேசங்களுக்கு 'ருத்ரகீதை' யென்றும் கணேசகீதை என்றும் சேர்த்துச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. ஸஹஸ்ரநாமா என்ருலும், கிருஷ்ண பரமாத்மாவை தேவதையாக உள்ள பாரதத்தில் இருக்கும் விஷ்ணு ஸஹஸ்ர நாமந்தான் அறியப்படுமே தவிர இதர நாமங்களை லலிதா ஸஹஸ்ர நாமம் போன்று, வேருெரு பதத்தைச் சேர்த்தே சொல்லவேண்டியதாயிருக்கிறது.

ஸஸுராஸுர கந்தர்வம் ஸயக்ஷாரக
ராக்ஷஸம்
ஜகத்வசே வர்த்ததேதம் க்ருஷ்ணஸ்ய
ஸ்சராசரம்

என்று இந்த ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்திலேயே காணலாம்.

ஆலயங்களிலும் வைஷ்ணவ மூர்த்திகளை க்ருஷ்ணஷ்டோத்தர சதநாமா வளியைக் கொண்டே அர்ச்சனை செய்கிருர்கள்.

கிருஷ்ணஸ்வரூபம்

கிருஷ்ணபகவான் விஷயத்தில் ரூபம் வேறு சக்தி வேறு, ஸ்வரூபம் வேறு என்று கிடையாது. ''ஸ்வரூபமேவ கார்யோன்முகம் சக்தி சப்தேன உக்தம்.'' கிருஷ்ணனைச், சிலர் தங்களைப்போல் ரூபமில்லாத ஆத்மா தேகத்தை அடைந்ததாக எண்ணுகிருர். இது பிசகு. கிருஷ்ணபகவானே ஸச்சிதாநந்த விக்கிரஹம் எனப் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பிரம்மாண்ட புராண அஷ்டோத்தரத்தில், நந்தவ்ரஜ ஜனனந்தீ, ஸச்சிதாநந்த விக்ரஹ;'' என்றும், ஸ்ரீமத் பாகவதத்தில் பரம்மாவினுடைய ஸ்துதியில் ''த்வய்யே நித்ய ஸுகபோததனௌ'' என்றும், தாபனீ உபநிஷத்தில் 'ஸச்சிதாநந்த ரூபாய க்ருஷ்ணயாக்லிஷ்ட காரிணே' என்றும் காணப்படுகிறது. ஸ்ச்சிதானந்த ரூபத்தில் ஸத்வம் ''பவாநேகசிஷ்யதே சேஷஸம்ஞ;'' என்று தேவகீ தேவியாலும், சித்ரூபம் 'ஸத்யஸ்வயம்ஜ்யோதி ரனந்த ஆத்ய' என்று பிரம்மாஸ்துதியிலும் (X. 14) ஆனந்த ரூபம் 'கேவலானுபவாநந்த ஸ்வரூப ஸர்வ புத்தித்ருக்' என்று தேவகியாலும் எடுத்து விளக்கப்பட்டிருக்கிறது. மேலும் கிருஷ்ணபகவானுடைய பூரணத்வம் கீழே கூறப்பட்ட ஸ்ரீமத் பாகவத சுலோகத்தில் காணலாம். பகவான் மல்ல ரங்கத்திற்கு வந்தபொழுது எவரெவர் எந்த பாவனையோடு பகவானை ஸ்மரித்தாரோ அந்த பாவனையில் அவரவர்களைக் கிருஷ்ணன் ஏற்றுக் கொண்டார் என்று அதின் பொருள்.

''மல்லானமசநி: ந்ருணம் நரவர: ஸ்திரீ
ணும் ஸ்மரோ மூர்த்திமான்

கோபானும் ஸ்வஜந : அஸதாம் க்ஷிதிபுஜாம்
சாஸ்தா ஸ்வபித்ரோ சிசு :

ம்ருத்யுர் போஜபதே :விராடவிதுஷாம்
தத்வம் பரம்யோகினும்

வ்ருஷ்ணீநாம் பரதேவதேதி விதிதோ
ரங்கம் கத : ஸாக்ரஜ : (X. 43 : 17)

இப்படிப் பத்துவித ரஸங்களாலும் பகவான் கிருஷ்ணன் ஒருவரே அறியப்படுவர். அதில் நமக்கு வேண்டியது ஸ்ரீதரரால் எடுத்துக் காண்பிக்கப்பட்ட பிரேமையோடு கூடிய பக்தியே.

இந்துமத ஸாரம்

(219-ம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரண தாந்திரிக வழிபாடு சம்பந்தமான கிரியையிலிருந்து ஒரு சில உதாரணங்கள் இப்பொருளை விளக்கலாம். பூஜை செய்யப் புகுமுன் பக்தன் நீராடவேண்டும்—ஏதேனும் புனித நீரிலே நீராடல் நன்று; தனது உடலை முழுதும் தூயதாக்கவேண்டும்; பின்னர் அழுக்கற்ற நல்ல ஆடைகளை—இக்காரியத்திற்கென்றே வேருகப் பலமுறையும் வைக்கப்பட்டுள்ள—ஆடைகளை அணிந்து கொள்ளவேண்டும். வழிபாடு செய்யும் இடம் தூய சம்பந்தம் பெற்றதாதல் வேண்டும்; அது ஒரு கோயிலுக்குள்ளோ, ஒரு புண்ணிய மரத்தின் அடியிலோ, ஒருவனது இல்லத்தைச் சார்ந்த பூஜையறையிலோ இருக்கலாம். எப்படியும் அந்த இடமும், அவ்வழிபாட்டிற்காகப் பயன்படுத்தும் எல்லாப் பொருள்களும் ஐயமறத் தூய்தாக்கப்பட வேண்டும். அவ்விடத்திற்குச் செல்லுமுன் அன்பன் தன் உள்ளத்தைத் தியானம் தோத்திரம் ஜெபம் வாயிலாக இறைவனிடம் திருப்புதல் வேண்டும்.

அவ்விடத்தின் எல்லைக்குட் புகுமுன், தன் உள்ளம் எல்லா மாசுகளும் நீங்கப் பெற வேண்டும் என்று அவன் பிரார்த்திக்க வேண்டும். பின் தனது பூஜையைக் காண வருமாறு சில தேவதைகளை அழைத்துவிட்டு, 'ஆசமனம்' (வல உள்ளங்கையில் மந்திர பூர்வகமாக மும்முறை நீரை எடுத்துக் குடித்தல்) என்பதால் அவன் தன்னைத் தூய்மையாக்கிக் கொள்ள வேண்டும். இது சம்பந்தமாகக் கூறப்படும் மந்திரம் இனிமைவாய்ந்தது. அதன் உட்கருத்தாவது ''விண்ணிற் பரவும் கண்களைப்போல் விஷ்ணுவின் பரமபதத்தை ரிஷிகள் இடையருது தரிசிப்பர்' என்பது. இம்மந்திரத்தின் நோக்கமாவது அறுதியான மெய்ப்பொருளாகிய பரப்பிரம்மத்தினிடத்து நம்பிக்கையை ஊட்டுதலே என்பது வெளிப்படை. ஆத்ம சுத்திக்கு இது பயன்தரக் கூடிய ஓர் உபாயமாகக் கருதப்படுகிறது.

பின்னர் தான் பூஜைக்கு உபயோகிக்கும் நீருக்குள்ளே ஏழு தூய நதிகட்குரிய எல்லா அதிதேவதைகளையும் வரவழைப்பதால் அதனைத் தூயதாக்குகிறன். இதன்பின் இந்நீரே தூய்மையளிக்கும் இயல்பைப் பெறுகின்றது. தக்க மந்திரங்களோடு இந்நீர் பூஜைக்குத் துணைப் பொருள்களான ஆசனம், மலர்களும் அவை அமர்ந்துள்ள கலங்களும், தூபத்தட்டு, விளக்கு, காணிக்கை முதலான, பூஜையோடு சம்பந்தம் பெறும் ஒவ்வொன்றினையும் புனிதப்படுத்துதற்காகத் தெளிக்கப்படுகின்றது. தனது ஆசனத்திற்குக் கீழுள்ள தரையையும் 'பூமியின் அதிதேவதையே, மக்களை நீ தாங்குகின்றனை, நின்னை விஷ்ணு தாங்குகின்றனர், நீ என்னைத் தாங்கி இவ் ஆசனத்தைப் புனிதமாக்குக' என்னும் பொருளடங்கிய மந்திரத்தாற் புனிதப்படுத்துதல் வேண்டும். இத்தகைய அற்பப் பொருள்கள் வாயிலாகக் காட்சி எங்கும் பரந்துள்ள ஈசன்வரை விரிந்து செல்கின்றது; இவ்வாற்றுல் மனம் உயர்ந்த ஞான பூமிக்கு ஏற்றப்படுகிறது.

இதன் பின்னர் பூதசுத்தியென்னும் படியை ஒட்டிய தியானம் மிக இனியதாகின்றது. தூல வடிவங்கள் மூலமாக ஒருவனுடைய நினைவுகள் படிப்படியாகப் பிரபஞ்ச லயத்திற்கும், ஆன்மாவைப் பரப்பிரம்மத்தினிடம் ஒன்றச் செய்தற்கும், மீண்டும் அவற்றைத் தெய்விக வடிவோடு வெளிக்கொணர்தற்கும் செலுத்தப்படுகின்றன என்பதை அது காட்டுகிறது. இம்முறையைப் பின்பற்றும் போது, ஒருவன் பாவத்திற்கே நிலைக்களமாயுள்ள பாப புருஷனுயுள்ள தன் உடலையும், தனது சூக்கும உடலையும் சேர்த்து உலர்த்துவதாகவும் பின் எரிப்பதாகவும், அதன் பின்னர் நெற்றிப் பிரதேசத்திலுள்ள மதியினின்று ஒழுகும் அமுதத்தின் துணையால் ஒரு புதிய தெய்விக சூக்கும உடலை உண்டாக்குவதாகவும் நினைக்க வேண்டும். இத்தூல வடிவங்கள் வாயிலாக அன்பன் தனது உள்ளம் மாசறத்தூயதாகி விட்டதாக நம்பும்படித் தூண்டப்படுகிறுன்.

அந்நினைவுகள் உள்ளுறைப் பொருளனவாய், கிட்டத்தட்டக் கவித்துவ இயல்புடையனவாய் இருக்கலாம்; ஆயினும் அவற்றுல் விளையும் பலனை நேரிற் காணக்கூடியதாகும். நாம் தீவிரமாக எதை நினைக்கிருேமோ அதுவே யாகிருேம். நமது பலவீனத்தையும் தீமையையும் பற்றியே சிந்தித்துவரின், பலவீனமாயும் தீமையோடுமே நாம் இருப்போம். இதற்கு மாருக, நாம் தூயரென்னும் நினைவையே வற்புறுத்தி வருவோமாயின், தூயராகவே ஆவோம். இது ஒரு வகையிலே தன்னைத்தான் வசியம் செய்யும் முறையேயாம். நாம் இயல்பாகவே தூயராயுள்ளோம். ஆதி அவித்தை காரணமாக நாம் நம்மைப் பாவிகளாகக் காணவும் அவ்வாறே ஒழுகவும் இயலுமாறு நம்மையே மயக்கக் காட்சிக்கு வசியப்படுத்திக்

கொண்டுவிட்டோம். நினைவுகள் செல்லும் திசையை மாற்றுவதால் நாம் நம்மை அவ் வசியத்தினின்றும் விடுவித்துக் கொள்ளல் வேண்டும். இந்து வழிபாட்டு முறையோடு சம்பந்தப்பட்ட ஆத்ம சுத்திக்கான ஆரம்பக் கிரியைகள் அனைத்திலும் அடங்கியுள்ள கருத்து இதுவே. தூல உடலும், உண்மையிலே அதிலுள்ள ஒவ்வொரு புள்ளியும், நியாஸம் எனப்படும் முறையால் தெய்விகமாக்கப்படல் வேண்டும்.

இவையனைத்தும் முடிந்ததும், பக்தன் இறைவனைப் பிரதிமை மூலமாகவோ பிரதிகை (ஒரு குறி) மூலமாகவோ பூஜை செய்யத் தொடங்குகிறான். பூஜை உபசரிக்கும் முறையாகின்றது. தெய்வத்திற்கு நல்வரவு கூறுவர், ஓர் ஆசனம் இடுவர், நீராட்டி உடையளிப்பர், பிறகு மலரையும் தூபத்தையும் இனிய உணவுகளையும் சமர்ப்பித்து மகிழ்விப்பர். இவ்வாறு ஆத்மசுத்திக்கான ஆரம்ப முறைகளால் தன்னையே தெய்விகமாக்கிக் கொண்டும், உபசரணை முறைகளால் அத் தெய்வத்தை மனிதனுக்கியும், பக்தன் பூஜை வேளையிலே பகவானோடு புனிதமாக அளவளாவி, இயன்றவரை அவருக்கு அருகாமையிலே வாழ்ந்து வருகிறான்.

மேலும், இந்த உபசரணை முறை முழுவதும் மனோபாவனை முறையால் மீண்டும் நடைபெற வேண்டியிருக்கிறது. இது மானஸ பூஜை எனப் பெயர்பெறும். வழிபடுவோன் தனது உள்ளத்தைத் தூலமான சூழ்நிலையினின்றும் இழுத்து, இறைவனைப் பற்றிய தியானத்தில் ஆழ்ந்திருக்கச் செய்யவும், மனத்தால் வழிபடுதலைச் சார்ந்த மிக இனிய தூலக் கருத்துக்கள் மூலம் அதனை இயற்றவும் துணைபுரிகின்றது, அது வழிபடுவோனுடைய மனத்தைத் தூல உலகினின்றும் சூக்கும உலகிற்குச் செலுத்த முற்போக்கான ஒருபடி இது என்பது தெளிவாகும்.

பகவானை மனித நிலையில் உபசரித்த பின்பு, அவரது பெருமையை ஆரத்திரிக முறை (ஆரத்தி) வற்புறுத்துவதாகத் தோன்றுகிறது. இது குறிகள் வாயிலாக வணங்கும் முறையெனத் தெரிகிறது. இறைவனது திருவுருவத்தின் முன்பு தீபம் நீர் துணி மலர் சாமரம் என்பவற்றைச் சுழற்றுதலே இம்முறை. இப்பொருள்கள் முறையே தீ நீர் ஆகாசம் பூமி வாயு என்னும் பூதங்களைக் குறிப்பதாகத் தோன்றுகின்றன. துணி (வடமொழியில் அப்பொருள்படும் 'அம்பரம்' என்னும் வார்த்தைக்கு 'ஆகாசம்' என்பதும் பொருள்) எண்ணிறந்த துவாரங்களை யுடைமையின், ஆகாசத்தைக் குறிக்கின்றது; மணம் பூமியின் தனிப் பண்பாதலின், அதற்கு மலர் சிறந்த அறிகுறியாகும். உலகம் அதன் முதற்காரணமாய் பஞ்ச பூதங்களாற் குறிக்கப்படுதலின், குறியீட்டு முறையால் பிரபஞ்ச முழுமையும் பகவானை வழிபடும் வகையாக அவருக்கே சமர்ப்பிக்கப்படுகின்றது. பகவானை மனிதனுக்கிய கருத்தினின்றும் அனைத்துலகங்கட்கும் அதீதமான அவரது நிலைக்குப் பக்தனது மனத்தை உயர்த்துதற் பொருட்டு எங்கணும் பரந்துள்ள ஈசனை எவ்வளவு காம்பீரியமான வகையிலே வழிபடுகின்றனர் என்பதை இது விளக்குகின்றது.

ஹோமம் என்னும் செயலோடு பூஜை பொருத்தமாக முடிவு பெறுகின்றது. 'ஹோமம்' என்பது, அதற்கென வளர்க்கப்படும் தூய அக்கினியில் ஆகுதி பண்ணுதலே; இது வேதகால வழிபாட்டு முறை மறையாது வாழ்தலைக் குறிப்பது வெளிப்படை. ஆயினும் பூஜை முடியும் சமயத்துச் செய்யப்படும் இக்கிரியை பொருள் பொதிந்த தொன்றேயாம். ஈசனைப்பற்றிப் பக்தன் கொள்ளும் கருத்து, அதுவரை தூலமாகவோ மனோ மயமாகவோ இருந்த பிரதிமை காரணமாகப் பெற்றிருந்த வடிவம் என்னும் வரையறையைத் தாண்டிச் செல்ல இக்கிரியை துணை புரிகின்றது. நெருப்பிற்கு அதிதேவதையான அக்கினியின் வாயிலாகப் பக்தன் சமர்ப்பிக்கும் பொருள்கள் பிரபஞ்சத்திற்கு அதிபதியான ஈசனிடம் செலுத்தப்படுகின்றன. அதற்கும் மேலாக, பிரபஞ்சத்தையும் அதனைப் படைத்த இறைவனுகிய சிவபெருமானோடு கூடத் தூய அக்கினியிலே ஆகுதியாகப் பக்தன் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் சில சமயம் எதிர்பார்க்கப்படுகின்றது. பக்தன் எல்லா உருவங்களையும் தாண்டிச் சென்று, தனது ஆன்மாவும் பரப்பிரம்மமும் ஒன்றே யென்பதை உணருவதற்காக அவனுக்குத் துணை புரிவதையே குறியாகக் கொண்ட இக்கிரியையின் துணிவை என்னென்பது!

எனினும், இந்துமதக் கிரியைகள் ஓர் இனிமையான பயன்தரக்கூடிய ஞான சாதன முறையாலே மனதைத் தூய்மைப்படுத்தும் நோக்கங் கொண்டன என்பதைக் காட்டுதற்கு முற்கூறிய உதாரணங்கள் போதியவாகும். இக்கிரியைகளைச் சிரத்தையோடும் விடாமுயற்சியோடும் வேறு பயனை விழையாது பின்பற்றி வரக் கூடுமாயின், அவை மனத்தை மேலும் மேலும் தூய்மை

யாக்கி வருவது உறுதியே யாகும்; இறுதியில் அதன் பயனாக, உயர்ந்த பாரமார்த்திக உண்மைகளை நேரே காணும் திறமையை அளிக்கும் தூய ஞானக் காட்சியெனும் சக்தி வெளிப்படலாகும்.

புராணம்.

புராணம் (இதிகாசங்களை உள்ளிட்ட பழங் கதைகள்), உபதேசங்கள் வாயிலாகவும் உயர்ந்தோர்களின் ஒழுக்கங்கள் வாயிலாகவும் ஒருவன் தனது வாழ்க்கையை மிக உயர்ந்த இலஷிய வாழ்க்கையாகுமாறு மேன்மைப்படுத்த முயலும்படி அவனுக்கு ஊக்கத்தை ஊட்டும் நோக்கத்தை யுடையதாகும். சரித்திர ஆதாரம் பெற்ருே பெருதோ எழுந்துள்ள பழங் கதைகளும் உவமைக் கதைகளும் பெரியாருடைய வரலாறுகளும் அதில் அடங்கியிருக்கும். இவைகளில் ஒரு சில உள்ளுறைப் பொருளையுடைய கதைகளாகும்; வேறு சில காவியரசம் நிறைந்த காட்சிகளின் வருணனைகளாகும்; இன்னுஞ் சில மிகமிகப் பழமையான சில நிகழ்ச்சிகளை உரைப்பனவாம். இவை வாயிலாக இந்துமதத்தின் இலக்ஷியங்களும் மிக உயர்ந்த சூக்கும மான கருத்துகளும் பொது மக்களின் உள்ளத்தே விளங்கும்படிப் புகுத்தப்படுகின்றன. சூக்குமமான தத்துவங்களும் போதனைகளும் கதைகள் மூலமாகத் தூல வடிவம் பெறுவதோடு, மிக இனிமையுடையனவாயும் மனத்தில் எளிதே பதியக் கூடியனவாயும் ஆக்கப்படுகின்றன.

வேதத்தைச் சார்ந்த பிராம்மணங்கள் உண்டான பழங்கால முதலாக இத்தகைய சிறப்புமுறை கையாளப்பட்டு வந்துள்ளது. பிராம்மணங்களிலே இதிகாசங்களும் (பரம்பரைக் கதைகள்), புராணங்களும் (உலகத் தோற்றத்தைப் பற்றிய கதைகள்), காதைகளும் (காவிய சம்பந்தமான பாடல்கள்,) நாராசம்ஸியும் (வீரர்களைப் புகழும் பாடல்கள்) உள்ளன. நாளடைவில் இத்துறையிலே தனிப்பட்ட இலக்கியங்கள் தோன்றி வளர்ந்து பெருகி, இந்துக்களின் புராணங்களாக உருப்பெற்றன.

இந்த இலக்கியங்களின் பெரும்பகுதி வரலாற்றைக் கூறும் பாட்டாகவே அமைகிறது; இராமாயணமும் மஹாபாரதமும் இதிகாச வகையைச் சார்ந்தன. இக்காரணம் பற்றியே, இந்துமதத்தின் மிக உயர்ந்த சூக்குமமான கருத்துக்களையும் இலஷியங்களையும் நேரே பொதுமக்களின் நெஞ்சிற்குள் புகட்டுவதற்கு இம்மாதிரி நூல்கள் மிகச் சிறந்த வாயில்களாகின்றன. வேதத்தைச் சார்ந்த பிராம்மணங்கள் உண்டான கால முதலாக இம்முறை பழக்கத்தில் இருந்து வந்துள்ளது. அந்நாள்களில் கதைப் பாடல்களைப் படித்தல் வைதிக கிரியைகளின் ஓர் அங்கமாக அமைந்தது. உதாரணமாக, அசுவமேத யாகத்திற்கு இம்மாதிரியான புராணபடனம் (புராணம் படித்தல்) அவசியமான பூர்வாங்கமாக (முன் நிகழவேண்டிய காரியமாக) இருந்தது. அரச சபையில் அத்தகைய பாக்களைப் படித்தலோ பாடலோ சூதர்கள் எனப்படும் ஒரு வகுப்பினர்க்கு உரியதாயிற்று; இன்னும், முனிவர்களும ஒரு தனிமையான இடத்திற் கூடி, ஆக்கியானங்கள் இதிகாசங்கள் புராணங்கள் ஆகிய நூல்களைப் படிக்கக் கேட்டலில் மழைகாலம் முழுமையையும் கழிக்கலாயினர். அவ்வழக்கம் ஒருவகையிலோ வேருெரு வகையிலோ இன்றுவரை நிலைத்து வந்துள்ளது. மத சம்பந்தமாகவோ ஸமூக சம்பந்தமாகவோ ஒரு காரியம் நிகழும் போதெல்லாம், இந்து புராணங்களிலிருந்து ஒரு பகுதியை நாடகமாக நடித்தலோ 'கதைக்காரர்' ஒருவர் அதைக் கதையாகப் பிரசங்கம் பண்ணுதலோ பல முறையும் உடன் நிகழ்ந்து வந்துள்ளது. இவ்வாருக நெடுங் காலமாக இந்துமதத்தின் உயர்ந்த கருத்துக்களும் இலஷியங்களும் மனதிற் பதியக்கூடிய கதைகள் வாயிலாகவும், ஆவேசத்தை யூட்டும் சரித்திர நிகழ்ச்சிகள் மூலமாகவும் இந்து ஸமூகத்தைச் சார்ந்த ஒவ்வொரு வகுப்பினர்க்கும் புகட்டப்பட்டு வந்துள்ளன.

இந்துக்கள் அனைவர்க்கும் சமயக்கல்வியை ஊட்டுதற்காக (குறைந்தது) ஆருயிர வருடகாலமாக, முன்ஞெடு பின் முரணது ஒழுங்காக, மஹத்தான முயற்சி இவ்வாறு நடைபெற்று வந்ததே மிக ஆச்சரியமான ஒரு நிகழ்ச்சியல்லவா? மத சம்பந்தமான காரியங்களிலே இந்துக்களிடத்து எவ்வளவு வியக்கத்தக்க விடாமுயற்சியோடு கூடிய ஊக்கம் இருந்து வந்தது என்பதற்கு இதுவே ஒரு சான்ருகின்றது. அந்த ஊக்கம் வீணுகவுமில்லை. இம்முறையினுல் பல்லாயிர ஆண்டுகளாகப் பொதுமக்களின் உள்ளத்தில் இந்துமதக் கருத்துக்களும் இலக்ஷியங்களும் நன்கு ஊறியிருக்கின்றன. உயர்ந்த சூக்குமமான கருத்துக்கள் அவர்கட்கு எட்டாதவையாகலாம் எனினும், சில உவமைகள் மூலமாகவும் சித்திரங்கள் மூலமாகவும் அவை ஒருவாறு உணரப்படுகின்றன; மதத்தைப் பின்பற்றும் முயற்சியில் சிரத்தையைக் கிளப்புவதற்கு அது போதிய தாகின்றது. இம்மாதிரியாக சாஸ்திர அறிவால் விளக்கம் பெற்ற

சிலர், இந்து ஸமூகத்திலே தாழ்ந்த படிகளில் இருப்பவராயினும், ஞான வாழ்க்கையின் மிக உயர்ந்த இலக்ஷியத்தை அடைவதில் ஆவேசமுடையவராகப் பன்முறையும் காணப் பட்டனர். உண்மையாகவே, புராணம் பொதுமக்களது மனத்தை ஞான மலையின் சிகரங்கட்கு உயர்த்துவதில் வலிமை வாய்ந்த ஒரு நெம்புகோலைப்போல வேலை செய்கின்றது.

இனி இந்துமதப் புராணம் எத்தகையது என்பதையும், அது எவ்வாறு இம்மாதிரியான அற்புதங்களை நிகழ்த்துகிறது என்பதையும் நாம் கவனிப்போம். முதல்முதலாக, ஈசன் ஆன்மா இயற்கை எனும் மூன்று தத்துவங்களைப் பற்றிய சூக்குமமான இந்துமதக் கருத்துக்களைத் தூலமான படக்காட்சிகள் வாயிலாக அது எடுத்துரைக்கின்றது. செய்திகளையும் போதனைகளையும் படங்கள் வாயிலாக அளிப்பது போலவே, கதைகள் வாயிலாகவும் வழங்கலாம். படமோ கதையோ நேரே உண்மையன்று எனினும், ஓர் உண்மையை ஒருவனது மனதிற் பதித்தற்கு அது துணையாகின்றது. நிலப்படம் என்பது யாது? அது அதனாற் குறிக்கப்படும் தேசமன்று என்பது உறுதி; ஆயினும் அந்நிலத்தைப் பற்றி மிகுதியான அறிவைத் தரவல்லதாகின்றது. புராணக் கதைகளைப் பற்றி உண்மையும் இதுவே. இவை உரைக்கப்படுகின்றபடியே உண்மையாக வேண்டும் என்பது கருத்தன்று; ஆயினும் அவை வாயிலாகச் சூக்குமமான தத்துவார்த்தங்களைப் பற்றிய கருத்தை ஒருவாறு ஒருவன் பெறலாம். மிகப்பழமையான வேத காலந்தொட்டே, ஆக்கியானங்களை உள்ளபடியே உண்மையாகக் கொள்ளாமல் எவ்வாறு அவற்றுக்குப் பொருள் கொள்ளவேண்டும் என்பதுபற்றித் தனிப்பட்ட போதனைகளை அருளி வந்துள்ளனர்.

உதாரணமாக, படைப்பைப் பற்றிய கதையை எடுத்துக் கொள்வோம்; இந்தியாவிலுள்ள புராண இலக்கியங்களில் தவருது காணப்படும், மிகப்பிரியமான இக்கதையைக் கொண்டே முற்கூறிய பொருளை விளக்குவோம். பல கதைகளில் ஒன்றை (பாகவத புராணம் 3-8ல் உள்ளதை) எடுத்துக் கொள்வோம். நான்கு கைகளையும் பீதக ஆடைகளையும் உடைய நீல வண்ணத்தானாய நாராயண பகவான் எங்கும் பரந்துள்ள ஆழங்காண முடியாத கடலிலே மிதந்துகொண்டிருக்கும் ஆயிரந்தலை நாகமாகிய அனந்தன் மீது அமைதியாகத் துயில் கொள்ளுகின்றனர். வரம்பற்ற கடலின் (ஏகார்ணவத்தின்) நீர் 'காரண சலிலம்' (காரண நீர்) எனப்படும். வேறொன்றும் இல்லை. இதுதான் பிரளயத்தின் படம். படைப்பிற்கு முன்பு நாராயணரது உந்தியிலிருந்து முளைக்கின்ற ஒரு கமலம் கடல் முழுவதையும் தனது ஜோதி வெள்ளத்தால் நிரப்புகிறது; இந்தத் தாமரையின் மீது நான்கு முகங்களும் நான்கு கைகளும் கொண்ட சிவந்த நிறமுடைய தெய்வமாகிய பிரம்மா தோன்றுகிருர். ஈசனது ஆணைக்கு இணங்கிப் பிரம்மதேவர் பழைய கல்பத்தைப் பற்றித் தியானித்து, பின்னர் பிரபஞ்சத்தை அதற்கேற்பப் படைக்கத் தொடங்குகிருர்.

வருணித்தற்கரிய ஓர் உண்மையைப் பற்றிய இச்சித்திரம் எவ்வளவு மேன்மையுற்றதாகிறது! ரிக் வேதத்திலுள்ள பிரளய நிலையைப் பற்றிய வருணனையோ அறிவைத் திகைக்கச் செய்கிறது. அதையும் பார்ப்போம். "அவ்வமயம் ஸத்தும் இல்லை அஸத்தும் இல்லை, சுவர்க்கமும் இல்லை, பூவுலகமும் இல்லை......அப்போது மரணமும் இல்லை அழியாப் பெருவாழ்வும் இல்லை; இரவுக்கும் பகலுக்கும் உள்ள வேறுபாடு யாதொன்றும் இல்லை. ஏகமான பொருள் தனது சக்தியோடு (சுவதா) மட்டும் பிராணன் இல்லாத போதும் மூச்சுவிட்டுக் கொண்டிருந்தது. படைப்புக்கு முன் ஈதனைத்தும் இருட்போர்வையால் மூடிய இருளாயிருந்தது, காரணத்தோடு ஒன்ருயிருந்தது. பிரளய காலத்து, எங்கும் பரந்ததும், ஆனல் அற்பமானதும் ஆன அஞ்ஞானத்தால் மூடப்பட்டுக் கிடந்த பிரபஞ்சம் இறைவனது சங்கற்பத்தால் நாம வடிவங்கள் வாயிலாக மீண்டும் வெளிப்படலாயிற்று." (ரிக்வேதம்: 10-139 - 1 முதல் 3 வரை). 'காரணம்' என்பதைக் குறிப்பதற்காக வேத மந்திரத்தில் அமைந்துள்ள 'சலிலம்' எனும் மொழிக்குப் பதப்பொருள் 'நீர்' என்பது—இது கவனிக்கத் தக்கதே. இப்பகுதியை ஓர் ஐரோப்பிய பண்டிதர் "வெகுதூரம் வரை நுழைதற்கரிய பெரு வெள்ளம்" என மொழிபெயர்த்துள்ளார். ஆயினும், 'காரணத்' திற்குப் பதிலாக வேத மந்திரத்தில் 'சலிலம், (தண்ணீர்) எனும் மொழியை உருவகமாகப் பயன்படுத்தியிருப்பதே, புராண வரலாற்றிலே 'காரண' த்தை எங்கும் பரந்த நீராகச் சித்தரித்துக் காட்டுதற்கு ஒரு குறிப்பாக உதவியது. ஏகப்பரம் பொருள் அதன் சக்தியாகிய 'சுவதா'வோடு சேர்ந்து நின்ற நிலையே, நாராயணர் தமது யோக மாயையோடு கூடிய நிலையாகத் தூல வடிவம் பெற்றுள்ளது.

புராண வரலாற்றினின்றும், பிரளயம் சிருஷ்டி இரண்டையும் பற்றி வேதங்கள் வெளியிடும் பின்வரும் உண்மைகள் ஒருவரது உள்ளத்தில் பதிக்கப்படுகின்றன ; தமது மாயாசக்தியோடு கூடிய பகவான் மட்டுமே பிரளயத்திற்கு முன்பு இருந்தனர் ; மற்றவை யாவும் எங்கும் பரந்துள்ள தண்ணீராற் குறிக்கப்படும் காரண நிலையில் ஒடுங்கிக் கிடந்தன ; சிருஷ்டிக்கு முன் அவரது சங்கற்பத்தால் தமது மாயையின் வாயிலாகத் தம்மிடமிருந்தே பிரம்மாவின் (இரணிய கருப்பரும்), தோற்றமும், பிரம்மா மூலம் இதர சிருஷ்டியின் தோற்றமும் உண்டாயின. புராண வரலாற்றிற் காணப்படும் சித்திரத்திற்கு ஒரு சிறிது பொருள் கூறுவோமாயின் பிரளயத்தையும் சிருஷ்டியையும் பற்றிய இவ்வேத உண்மைகள் வெளியாகும். சிறிதும் பண்படாத உள்ளங்கள் அடிப்படைக் கருத்தை அறியும் அளவு வரை செல்ல இயலாதன என்பது தெரிந்ததே ; ஆயினும், அச்சித்திரத்தின் மூலம் அவர்கள் குறைந்ததாயினும் அவசியமான அளவிற்கு உண்மையை அறிவது உறுதி ; (சக்தியாகிய) தூய பத்தினியோடு உறையும் பகவானே படைப்பிற்கு ஒரே மூலகாரணம் என்பதை அறிவதும் அற்பமான மதிப்புடையதாகுமோ? அவரே நிமித்த காரணமும் உபாதான காரணமும் ஆவார்.

இவ்வாறு புராண வரலாற்றிலுள்ள சித்திர வடிவப் போதனைகளால், பகவான் இயற்கை ஆன்மா என்னும் முப்பொருளைப்பற்றி இந்து மதங்கூறும் அடிப்படை உண்மைகள் பொதுமக்களது உள்ளத்தில் நன்கு பதிக்கப் படுகின்றன,

மேலும், சரித்திரம் சம்பிரதாயம் கதை எனும் மூன்றினின்றும் பொறுக்கியெடுக்கப்பட்ட எண்ணற்ற இலக்ஷியங்களைப் புராணம், ஞான ஊக்கத்தை ஊட்டும் அளவிற்கு, இந்து ஜனஸமூகத்திற்குப் புகட்டியுள்ளது. இந்தியாவிலுள்ள இந்து மதத்தினரின் பொது உள்ளத்திலே நூற்றுக்கணக்கான பெரியோர்களின் ஒழுக்க விழுப்பம் புகுத்தப்பட்டுள்ளது. உயர்ந்தோர் முதல் தாழ்ந்தோர் ஈறாக அனைவரும் முயன்று பின்பற்றுதற்குரிய இந்து மத வாழ்க்கையின் மாதிரிச் சித்திரங்களாக அப்பெரியோர்கள் இன்றளவும் கருதப்பட்டு வருகின்றனர். உதாரணமாக : அரசன் வீரன் இல்லறத்தான் முனிவன் பக்தன், தந்தை, தாய், மனைவி, கணவன், புதல்வன், உடன்பிறந்தோன், வேலையாள்—இவர்களில் ஒவ்வொருவரது இலக்ஷிய வாழ்விற்கும், இவைபோன்ற ஏனைய இலக்ஷிய வாழ்வு ஒவ்வொன்றுக்கும் புராணங்களிலே தொன்று தொட்டு வந்துள்ள ஒரு தேசுமிக்க சித்திரமேனும் காணப்படுகின்றது. ராமர், கிருஷ்ணர், அருச்சுனன், யுதிஷ்டிரர், பீஷ்மர் வசிஷ்டர், விதுரர், நளமன்னர், அரிச்சந்திரர், கர்ணர், காந்தாரி, சீதை, சாவித்திரி, இலக்குமணர், பரதர், அனுமர்—இவர்களை இன்று வரை திகழ்ந்து வந்துள்ள பலப்பல இலக்ஷிய மக்கட்குள் வைத்தெண்ணலாம் ; அந்த இலக்ஷியங்கள் இந்துவின் வாழ்வையும் ஒழுக்கத்தையும் சரியான வழியிலே வார்த்தற்கு இன்றியமையாத வற்றாத ஞானப் பேரூக்க ஊற்றுகளாக இன்றளவும் ஒளிர்கின்றன.

இன்னும், கதைகளே ஞானச் சுரங்கங்களாயுள்ளன. ஒவ்வொன்றும் நெஞ்சிலே ஒரு முக்கிய படிப்பினையை எழுதிச் செல்கிறது. இலக்ஷியமாக விளங்கும் ஒரு இந்துவின் வாழ்க்கையிலும் ஒழுக்கத்திலும் யாதேனும் ஒரு பகுதியோடு நேரே தொடர்புடைய ஒரு விஷயத்தை விளக்கிக் காட்டுவது அதன் வழக்கம். படிப்பினை யாதேனும் ஒரு பாரமார்த்திக நீதியைப்பற்றியதாகவோ, யாதாவது ஒரு சாதனை முறையைப் பற்றியதாகவோ, ஒரு தர்மத்தைப் பற்றியதாகவோ, ஒரு மனிதனது வாழ்க்கை நிலைக்கும் ஸமூகத்தில் அவனுக்குரிய அந்தஸ்திற்கும் தொடர்பிற்கும் ஏற்றவாறு அமையும் சிறப்பான கடமைகளைப் பற்றியதாகவோ இருக்கலாம்.

(தொடரும்)

தேவியை வழிபடுவார்க்கு

ஆண் தெய்வத்தை வழிபடுவோர் பெண் தெய்வத்தையும் வழிபடல் வேண்டும்.
தெய்வத்தைப் பெண்ணாக வழிபடுவோர் பெண்ணைத் தெய்வமாக வழிபடல் வேண்டும்.
கடவுளை மனிதரூபமாக வழிபடுவோர் மனிதனைக் கடவுள்ரூபமாக வழிபடல் வேண்டும்.
வாழ்வை விரும்புவோர் மரணத்தையும் விரும்பல் வேண்டும்.

இன்பமாலை

(246-ம் பக்கத் தொடர்ச்சி)

44. படைத ராவுல குள்ள யாவுமொர்
படிவ ரக்கொடு விரவியே
மிடைத ராவழ கொளியொ டுங்குணம்
விலகு ருமலி ணைத்தலைக்
கடைத ராவமு தத்தி டைப்புணர்
கருவி லாவடி வுளதெனில்
இடைத ராமுது கன்னி தன்வடி
விணைத ருஞ்சிறி தென்பவே.

(பொ-ரை) இதுவரை படைக்கப்படாதுள்ள உலகங்கள் எல்லாவற்றையும் படைத்த வுலகங்களுடன் ஒரு வடிவமுறக் கொண்டு கலந்து இதுவரை செறிந்து தோன்றாத அழகு ஒளி ஏனைய குணங்கள் என்னும் இவற்றை இப்போதிருக்கும் அழகு முதலியவற்றுடன் பிரிவுபடாமல் இணைத்து, பாற்கடலிற் கடைந்தெடுக்கப்படாததொரு புத்தமுதத்தொடுஞ் சேர்க்கப்படும் தனக்கெனக் காரண மில்லாததொரு வடிவு...... ஒன்று உண்டாயின், அவ்வடிவம் முதல் நடு இறுதியற்றவளாகிய (இடையீடு இன்றி ஒளிர்பவளாகிய) பழைய கன்னி என்னுந் தேவியின் வடிவத்தைச் சிறிது ஒக்கும்; எ-று.

(படைதரா-படைக்கப்படாத. கொடு-கொண்டு விரவி-கலந்து. மிடைதல்-நெருங்கல், மிகல். அலை-கடல். கரு-காரணம். இடைதரா-துன்பமற்ற. இணைதரும்-ஒக்கும்.)

45. சுத்த மாமன மைந்தெ னும்பொறி
தூய வாசனை முற்குணம்
ஒத்த வாவியொ டுரிமை செய்திவ்
வொருமை மேவிட வுறைபவர்
சத்த பூமிகடந்த காமினி
சங்க வெண்குழை யங்கனை
அத்த னுருயி ரவள்ப தம்பெற
லரிய தன்றிது சரதமே.

(பொ-ரை) சுத்தமாகிய சிறந்த மனமும் ஐம்பொறிகளும் சுத்த வாசனையும் சத்துவ குணமும் பொருந்திய உயிரும் ஆகிய இவற்றைத் தேவிக்கு உரிமைப்படுத்தி (அர்ப்பணஞ் செய்து) இவ்வுலகில் ஒரு முகப்பட்டு வாழ்பவர், சுயேச்சை முதலிய ஏழு பூமிகளையுங் கடந்த விரும்பத்தக்க அழகுடையவளும் வெள்ளிய சங்ககுண்டலத்தையுடைய பெண்ணும் சிவபெருமானுடைய அரிய உயிரும் ஆகிய அத்தேவியின் பாதங்களைப் பெறுதல் அரியதன்று, இது உண்மையே; எ-று.

(பொறி-இந்திரியம். முற்குணம் - ஸத்குணம். ஆவி-உயிர். காமினி-பெண். அங்கனை-பெண். அத்தன்-சிவன். சரதம்-உண்மை)

46. கொடிய பெண்டிரு மருள்செ யப்படு
குலம டைந்தவ ரென்னவே
அடிய றுங்கொலை முதல வன்னவ
ரடை யொ ணுமுறை யாள்வதும்
படிய ருந்திரு வடிவு றுஞ்சிவை
பகர்வ ருங்கடல் விதிதருங்
கடிவ ருஞ்சிறு பார்வை யருண்மழை
கா லு கின்றது கருதியே.

(பொ-ரை) கொலையிற் கொடிய பெண்களும் அருள் செய்யத் தக்க வகுப்பைச் சார்ந்தவர் என்று கருதி காலறுதற்குக் காரணமான கொலை முதலிய தண்டனைகள் அப்பெண்கள் அடைய வேண்டாத நெறிமுறையில் அரசாள்வதும், ஒப்பில்லாத அழகிய வடிவைப் பொருந்திய தேவியின் சொல்வதற்கரிய கடல் போலும் கருமையும் அகலமும் நீர்மையும் உடைய விழியுதவும் நீக்கம் இல்லாத சிறுபார்வையானது அருளாகிய மழையைச் சொரிகின்றதனைக் கருதியாம்; எ-று.

தேவியின் கண்ணினைக் கடல் என்றும் பார்வையை மேகம் என்றும் அருளை மழை என்றுங் கொள்க. தேவி பெண் குலத்தைச் சார்ந்து அருளுடையளாய் இருப்பதனால் அவளைச் சுட்டிப் பெண்களுக்கெல்லாம் அருள் செய்யுமுறைமையில் அரசாட்சி நிகழும் என்பது.

(படியரும்-ஒப்பற்ற. திரு-அழகு: சிவை-பார்வதி. கடிவரும்-நீக்கமில்லாத. காலுதல்-சொரிதல்.)

47. திகழு ஞானம திற்ப ராபவா
திருவு டம்பினை யுணர்வரால்
இகழி லாதவ வத்தை தம்மிடை
யிணையி லாவொளி தெளிவரால்
புகழ றாதந லருளி னின்மிகு
புனித வீடது பெறுவரால்
நிகழ வாவற நெடிய வாழ்வுறு
நிமல ராகிய புலவரே.

(பொ-ரை) நிகழும் ஆசையில்லாது அழியாத வாழ்வாகிய வீடு பேற்றை விரும்பும் மாசற்றவராகிய ஞானிகள், விளங்குகின்ற ஞானத்தில் பரா சக்தியின் அழகிய உடம்பினை அறிவர்; இகழ்ச்சியில்லாத சாக்கிர சொப்பன சுழுத்தி அவத்தைகளில் அவளுடைய ஒப்பற்ற ஒளியைத் தெளிவாக அறிவர்; அவளுடைய புகழ் நீங்காத சிறந்த அருளில் மிக்க புனிதமாகிய வீடுபேற்றினை அடைவர்; எ-று.

(திகழும்-விளங்கும். புனிதம்-பரிசுத்தம். அவா-விருப்பம். அற-நீங்க. புலவர்-ஞானியர். இகழ் இலாத அவத்தை, திகழ் அவா அற செடிய.. என்று பிரிக்கவும்).

48. பரம மாகிய மவுன மேசிவை
பாத மாமவள் சோதியே
பிரம மோடுக லந்த காலெபி
றங்கு மைக்கிய முத்தியாம்
வரம ளித்துல கம்பு ரந்திடு
வாமி வாழ்சிவ காமியிப்
பரம ணத்தழி பிறவி செற்றருள்
பரைப தத்துணை படர்கவே.

(பொ-ரை) சிறந்த நிலை ஆகிய மௌனமே தேவியின் பாதமாம்; அவளுடைய சோதியே பரம்பொருளோடு கலந்த போது விளங்குங் கைவல்லிய முக்தியாம். (ஆதலால்) வேண்டும் வரங்களை அளித்து (மேன்மையை உதவி) உலகங்களைப் பாதுகாக்கும் அழகுடையவளும் என்றும் வாழ்கின்ற சிவகாமியும் (சிவனால் விரும்பப்படுபவளும்) கன்மமாகிய பாரத்தைச் சேர்த்து உயிர்களைத் துன்புறுத்தும் இப்பிறவியை நீக்கியருளும் (கெடுத்தருளும்) பரையும் (மேலானவளும்) ஆகிய தேவியின் இணையடிகளைக் கருதுவீராக; எ-று.

(பிறங்கும்-விளங்கும். முக்தி-மோக்ஷம். புரந்திடு-காக்கும். செற்று-அழித்து. பரை-தேவி படர்க-தியானிக்க.)

49. அளவி லாதெழு முலக மியாவையு
மருளெ னுந்திரு நூலினில்
அளவி டும்படி மிகநு ழைத்துரு
ளார மாகவ டித்துரை
அளவி னுலறி வரும டந்தைய
வமர ரானவ ரறிகிலா
அளக சுந்தரி யகம கிழ்ந்திட
வாடு வாள்கரம் வீசியே.

(பொ-ரை) ஆகமப் பிரமாணத்தாலும் பிற பிரமாணங்களாலும் அறியலாகாத இளையாளும், அந்தத் தேவர்களும் அழியாத அளகத்தால் அழகு பெற்றவளுமான தேவி, அளவில்லாமல் தோன்றியுள்ள உலகங்கள் எல்லாவற்றையும் தன்னுடைய அருள் என்று சொல்லப்படுஞ் சிறந்த நூலில் கோத்து உருண்மணிகளையுடைய மாலையாக வடிவு செய்து (அதைக் கையிற் கொண்டு) மனம் மகிழும்படி கை வீசி ஆடுகின்றாள்; எ-று.

(அளவிடும்படி-கலக்கும்படி. வடித்து-வடிவு செய்து. உரையளவு-ஆகமப் பிரமாணம். மடந்தை-பெண். அளகம்-நெற்றியின் இருபக்கத்தும் உள்ள கூந்தற் சுருள், கூந்தலுமாம். அமரர்-அந்தத் தேவர்.)

50. வெண்மை சேர்திரு நீறு பாயொளி
மேவி யங்கலை நங்கையும்
ஒண்மை யார்சிவ னொளிக லந்துசெவ்
வுருவ டைந்தவர் மங்கையுந்
தண்மை யாயியல் பசுமை யுற்றொரு
தானு மாகிவி ளங்கிடும்
உண்மை கண்டவ ருன்னி டாரரு
ளுமைப தங்களை யன்றியே.

(பொ-ரை) தேவி, சிவபெருமானுடைய வெண்ணிறம் வாய்ந்த திருநீற்றில் நின்றும் பாய்கின்ற (பரக்கின்ற) ஒளியைப் பொருந்தி அழகிய கலைமகளும், சிறப்புப் பொருந்திய பச்சை நிறத்தைப் பொருந்தி ஒப்பற்றதானும் ஆகி விளங்கும் உண்மையை உணர்ந்தவர், அருளையுடைய அவ்வுமையின் பாதங்களை யன்றி (வேறொன்றையும்) கருதமாட்டார்; எ-று.

(அம்-அழகிய. கலை நங்கை-சரஸ்வதி. அலர் மங்கை-இலக்ஷ்மி. உன்னிடார்-நினையார்.)

51. கூறு மைம்பது மொன்று மாய்நிகழ்
குறைவி லாதவெ ழுத்துமாய்த்
தேறு சொல்லொடு பனுவ லாயவை
தெளியு மெய்ப்பொருள் யாவுமாய்
வீறு சேர்பரை விமலை மோகினி
வேத காரணி பூரணி
ஆறு சூடிய வமரி யம்பிகை
யகில மீதர சாள்வளே.

(பொ-ரை) பெருந்திய பரம்பொருளாகிய விமலை என்றும் பேருடையவளும் (உயிர்களின் மும்மலங்களை வேறுபடுத்துபவளும்) விருப்பத்தையுண்டாக்குபவளும் வேத காரணமானவளும் எங்கும் நிறைந்தவளும் கங்கையைச் சிரத்திற் சூடிய அமர மங்கையும் ஆகிய அம்பிகை, சொல்லப்படும் குறைவற்ற ஐம்பத்தோரெழுத்துக்களுமாய் அவ்வெழுத்துக்களாலாகிய சொற்களுமாய் அச் சொற்களாலாகிய நூல்களுமாய் அந்நூல்கள் தெளிந்துரைக்கும் எல்லா மெய்ப்பொருள்களுமாய் எல்லாவுலகங்களினிடத்தும் இருந்து அரசாளுகின்றாள்; எ-று.

(பனுவல்-நூல். வீறு-பெருமை.)

நூற்பயன்

கலிவிருத்தம்

ஓது மைம்பதொ டொன்றெனு மட்சரம்
மாது லாமலை மங்கை வடிவமாம்
ஈதுணர்ந்துரை இக்கவி மாலையால்
கோது ருநிலை கூடுவ துண்மையே.

முற்றிற்று